செந்தமிழ்

தொகுதி 86 ஜூன் 92 பகுதி 2

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ., பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்

நா. பாலுசாமி, எம்.ஏ.,பி எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.

பொருளடக்கம்

1. அழகு 1

டாக்டர். நாவலர் ச.சோ. பாரதி, மதுரை

2. குணங்குடியாரும் சித்தர் மரபும் 4

டாக்டர். பெ. சுப்பிரமணியம்

திரு. புட்பம் கல்லூரி, பூண்டி, தஞ்சாவூர்

3. இந்துமதம்-சீக்கியமதக்கோட்பாடுகள் ஒப்பியல் நோக்கு 7

ஆய்வாளர் அ. நடராசன் எம்.ஏ.எம்.பில்.டிப். பஞ்சாபி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

4. தமிழரால் முடியுமா? 29

டாக்டர். கதிர் மகாதேவன்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

5. அகராதிகளில் பொருள் விளக்கச் சான்றுகள் 34

டாக்டர். ஏ. ஆதித்தன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

6. நாம மந்திரம் 37

டாக்டர். அ.மா. பரிமணம்

தமிழ்ப்பேராசிரியர், தஞ்சாவூர்

7. சுவடிகளில் காலக்குறிப்புக்கள் 42

மோ.கோ. கோவைமணி

தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

8. திருக்கோவையே முதற்கோவை 51

முனைவர் கி. இராசா

பாரதிதாசன் பல்கலைக் கழகம்

9. நூல்மதிப்புரை 58

டாக்டர் நா. பாலுசாமி

அழகு

டாக்டர் நாவலர் ச சோ. பாரதி

ஐப்பொறி நுகர்வுக்கிலக்காய்ப் புலனுணர்வைப் புனிதமொடினிமைப்படுத்துவதனைத்தும் அழகேயாம். 'கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும்' ஐம்புலன் சுவைக்கு மழகனைத்தும் பண்பாமேனும், பண்பிகளைப்பற்றியன்றிப் பொறிநுகரு மழகொன்றில்லை. அழகோவியம் அழகியபண் அழகுணா அழகிய மணம் அழகூறு இவை பல சுவை நலச்செவ்வி யொவ்வொன்றும் ஓவியம் வீணை தேன் மலர் மெல்லிய லனையதோர் குணிகொண்டன்றி உணரொணாது. ஒளி அல்லது காட்சிப்பொருள், ஓசை அல்லது இசைப்பொருள், சுவை அல்லது துய்க்கும்பொருள், நாற்றம் அல்லது மோப்பப் பொருள், உறுதல் அல்லது பரிசப்பொருள் என்பவற்றுள் யாதேனுமொன்றை நிலைக்களனாகப் பெறாவிடத்து அழகெதுவும் புலன் புகுந்தினிய நலந்தரற்கில்லை.

உண்மையிற் பண்புகளின் பலதிறப்பட்ட கூட்டமே பல்வேறு பொருளாகப் பரிணமிப்பதல்லால் அவற்றின்புறப்பே பண்புகளைப் பகுத்துநீத்த தனிநிலையிற் பொருளென் றொன் றென்று மில்லை. தொன்மை நெடுமை, வன்மை, பருமை கன்மை யன்ன பன்மைத் தன்மைகளின் யாப்புறவாம் பான்மையேயாயதோர் மலைப்பொருளும், அப்பண்புகளை யொவ்வொன்றாய்க் கருத்தளவிற் பிரித்து நீப்பின், நிலைப்பொருளன்றி இலைப்பொருளென்று நீங்கக் காண்பாம். அவ்வாறே அறிவுக்கிலக்காம் அகிலஉலகப்பொருளனைத்தும் அறிதற்குரிய குணத்திரட்டாகக் காண்பாம். தானு மோர் பண்பாமேனும் அழகு பெரும்பாலும் வேறு பண்புகளின் சேர்க்கையாற் புலன் கவர்ந்தினிப்பிக்கும் பான்மையின் பரியாயமாம்.

இனி, புலன்புகுநலமெலாம் பொற்பெனல் பொருந்துமேனும், கட்புலன் கதுவும் கவினை அழகென்லே ஒட்பமுடையா ரொப்புரவாகும். அழகே கண்பருகுங் கள்ளும் காட்சிப்புலனை மாட்சிப்படுத்தும் அமுதமுமாம். பொறிப்புழை புகுந்து புலன்கள் அறைபோக்கி அறிவடிமை கொள்ளு மழகு விடநறவாம். விழிவழி நுழைந்து,

விழுமமொடு தூய்மை தழுவியுயரின் பத்தாலவசமாக்கும் அழகு நிலை யிறவா அமுத நலமீயும். இயற்கைப்பேரெழிலனைத்தும் இனைத்தே யாம். பொறித்துணைகூட்டி, விழைவூட்டி, உணர்வாட்டும் ஒப்பனைச் செய்கவினே பெரும்பாலும் உரன்கவரும் அரவாகும்.

புறத்திருளோ டகத்தலைக்கு மனைத்திருட்டு மறவோட்டி, மாசற்றார்மனம்போல மலரினங்கள் பொதியவிழ்ந்து மணமுகுப்ப, சோலைதொறும் மழலையொடு புள்வெள்ள மிசைமிழற்ற, அறவோர் செவ்வுள்ளமென அடிவானத் தழற்கதிர்களெழிலுமிய அருளுருவா யெழும் இரவியிளங் குழவியழகைக் காண்பாம். தொல்லுலகின் தொன்மைத்தாய், இறவாத பனிதவழு நெடுமுடியில் உடுக்கணங்கள் அரதனமா யொளிரநின்று, நந்தாத நலந்தருபொன் சிந்து முதற் பெருவளமார்கங்கையொடு* பிரமையெனும் யாறுகளால் உலகூட்டிப் பருவமெதும் நாடெதுவும் தருவனப்பும் வளமனைத்தும் தன்னகத்தே மன்னத்தாங்கிப் பாதமகள் அறவாழ்வை வடதலையில் நின்றோம்பும் மலையரசின் உலையா நல்லழகு காண்பாம். உலையாத அகல்வானின் தொல்லுறவு சொல்லுதல்போல் ஓவாத பசுநீல நீர்மை போர்த்து, அலையாத அறத்துறுதி யயராமல் அலைமுரசால் அனவரத மனைவரையும் அறிவுணர்த்தி, வியனுலகூட்டும் புயலினமருத்தும் பெருமைத்தாயினும்—தம்மைப்பேணும் அம்மையே தம்மகார் மிச்சிலை யும் நச்சுதல்போல்—முகிலுமிழ் மழைநீர் மூவழிமடுத்து 'உலகு யிரனைத்தும் நிலவுகென்' றென்றும் நிலம்புடை சூழ்ந்துநின்று வாழிபாடும் ஆழியினழகு காண்பாம். இன்னும் எல்லிவீழ அல்லிமு னெழுந்து, எல்லையில் தொல்லரும் பிறப்புணர்த்தி, ''நல்லனயாவை யும் ஒளியவாம், அல்லன இருளிடை முளைத்தவ் விருளொடு கழியும், அறந்தலைப்படுபவ ருளந்தளிர்த்திடுமா றமிழ்தளித்திடுவன், வம்மின் நீர் வம்மின்'' என்று தன் தண்கதிரிசைப்ப, வான்கொலு அரசுலா வருந் திருவனப்பார் முழுவெண்டிங்களின் அழகுநாங் காண்பாம். இன்னும் பகலவன் மாட்சிப் பாயிரங்கூற அகவிதழ்ச்சாக்ஷி பாயிரந்தேறு செந்தாமரையும், மணத்தூதனுப்பி வரும் வண்டர்தமை இருளிடை மருளாது கண்டு வழிக்கொளத் தமது தூய வள்ளிதழ்க்கரம் விரித் துபசரித் தப்பாணர்தம் இன்னிசைவேட்டுக் கேட்டவர்க்கு யாணர்த் தீந்தேன் உவந்தருத்தி விருந்தறம் யாண்டும் புரிந்து துறை மாண்ட நீராம்பன்மலர்நிரையும் இயற்கவினலத்தைப் பயக்குமுறைதேர்வாம். இவையெலாம் காண் பொறியுணர்வும் கண்டோருள்ளமும் மாண்பொடு

* பிரமை பிரமபுத்திராநதி

மகிழ்வால் மலர்ந்து அவர் சால்பை வளப்பட வளர்க்குமல்லால், எனைத்திறையும் கயமையின் நயப்பு நல்கா.

இனி கவித்துறையும் உலகியலும் காரிகையார் முகமதியைக் கவினமருங் கற்பமாக்கொள்ளக் காண்பாம். ஈண்டும் கண்டார்க் கிறுக்கு கள்ளனைய கரவுள்ளக் கபடுவளர் செவிலிமுகக் கவினும் உண்டு: மயக்கற்ற பெருமித வானுவகை மனத்தூட்டியொரு மறுவற்ற முழுமதிபோல் மலர் வதன வனப்பும் உண்டு. வரிமென்தோல் வனப்புடை மாவேங்கையெனத் தாவி மோதித் தரிபலர்போ லெதிர் பவர்கண் தாக்கி அவர் உணர்வுண்டு செம்மாக்கும் முகத்தெழிலே தாக்கணங்காம். இஃது. உடை யவரிளமையில் முதிர்ந்து, பெட் பவருளம் பேதுறுத்து. நிலையாது விரைவிலுலையும் நீர்மைத்தாம்: வான்மீகரகலிகையினழகும், வனத்திருவர் முன்வந்த வஞ்சச்சூர்ப்ப நகை வனப்பும் இவ்வரைப்பாம், காமங்கதுவாது, கண்டோருளமுவந்து புனித வான் பெருமிதப் புளகம் பூப்ப வயதொடு வளரும் வளமுடைத் தெய்வவனப்பு அமிழ்தின்நீர்த்து. கண்ணகி கவினும், காயுமனத் திலக்குவனைத் தாயரை நினைக்கவைத்த கம்பர்தம் தாரையழகும் இணைத்தாகும்.

இனி, அழகனைத்தும் உவகையொன்றே யுதவுமென்றல் உண்மையன்று. முற்றத்திருந்திய குற்றமில்லெழில் எதுவும்,—

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டாம் மெய்ப்பா''ட்டினுக்கும்

முதலுந் துணையும் முடிவுமாகும்.

நிறையும் நலனும் நீர்மையும் நிற்குந்
துறையும் போதும் துய்ப்பவ ருளமும்
முறையே தத்தம் முனைப்பா லவ்வம்
மெய்ப்பா டதனை மேவுறு விக்கும்

கண்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் காணார்க்குங்
காதல் வளர்க்குங் கவின்.

(இக்கட்டுரை செந்தமிழ் தொகுதி 25, பகுதி2—1926—இல் வெளி வந்தது)

குணங்குடியாரும் சித்தர் மரபும்

டாக்டர் பெ. சுப்பிரமணியன்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

திருவள்ளுவர்

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ்வுலகு''[49] என்றார். இக்கருத்தினைக் குணங்குயார் தம்பாடலில்,

''இன்றுள்ளார் நாளைக்கிருப்பது பொய் என்பதையான்
கண்டுகொண்டேன் ஐயா என்கண்ணே றகுமானே''[50]

எனப்பாடினார். இடைக்காடர் திருக்குறளின் பெருமைபேசுமிடத்தில்,

''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்''[51]

எனப்பாடிய கருத்தின் செல்வாக்கு

''கண்டித்த கடுகிலெழு கடடைப் புகட்டிக்
கலக்கி விளையாட வல்லீர்''[52]

என்னும் குணங்குடியார் பாடலில் குருவின் பெருமை பேசுவதாக அமைந்துள்ளது.

இவ்வுலகில் செல்வம், இளமை, யாக்கை, மனைவி, மக்கள், சுற்றம் ஆகியவை நிலையில்லாதன என்னும் கருத்து அறநூலாசிரியர்களாலும், அருளாளர்களாலும் வற்புறுத்தப்படுவது. ஆகவே அவர்கள் நிலையில்லாதவற்றை விட்டு நிலைத்ததாகிய இறைவன் திருவடியை அடையவேண்டுமென்பர். இவ்வாறு பாடுவதில் அவர்களுக்குள் கருத்து, தொடர் ஒற்றுமைகளைக் காண முடியும். பட்டினத்தார்,

''ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல; பெண்டீர் சதமல்ல; பிள்ளைகளும்
சீரும் சதமல்ல; செல்வம் சதமல்ல; தேசத்திலே
யாருஞ் சதமல்ல: நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே''[54]

என்று பாடினார். இடைக்காட்டுச் சித்தர்,

''மாடும் மனைகளும் மக்களும் சுற்றமும் வான்பொருளும்
வீடும் மணிகளும் வெண்பொன்னுஞ் செம்பொன்னும் வெண்கலமும்
காடும் கரைகளும் கல்லாம் பணியும் கரிபரியும்
தேடும்பல பண்டம் நில்லா சிவகதி சேர்மின்களே''54

என்றார். மேற்கண்ட பாடல்களில் கருத்துக்களைக் குணங்குடியார் மிக எளிமையாக,

''உற்றாரிருந்தென்ன பெற்றாரிருந்தென்ன உனக்குதவி
சற்றாயினுமில்லை சொன்னேன் சொன்னேனிது சத்தியமாய்ச்
செற்றாலும் வெத்தடி வாங்காமல் நிற்கிற செயம்பெறலாம்
கற்றாற் குணங்குடி கொண்டிடுவாய்மனக் கண்மணியே''55

என்னும் பாடலால் உணர்த்தினார்.

குணங்குடியரர் பாடல்களில் தாயுமானவர் பாடல்களின் கருத்து, தொடர், நடை ஒப்புமை ஆகியவற்வை மிகுதியாகக் காணமுடிகிறது.

''சில அடிகளைத் தனித்துக் கொடுத்தால் இது தாயுமானவர்
பாடலா அல்லது மஸ்தான் சாகிபு பாடலா என்று
பிரித்துச் சொல்ல முடியாத அளவுக்கு அவை ஒன்றிணைந்து
இருப்பதைக் காண முடியும்''56

என்று சிலம்பொலி சு. செல்லப்பன் கூறியுள்ளது போன்று, தாயுமான வரிடத்தில் குணங்குடியார் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது புலப்படுகின்றது. தாயுமானவர் திருமறைக்காட்டில் தோன்றி, திருச்சியில் சிறந்து, இராமநாதபுரத்தில் கி.பி. 1662–ஆம் ஆண்டு தைத்திங்கள் 28–ஆம் நாள் விசாகத்தன்று சமாதியடைந்தார். குணங்குடியார் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் கி.பி. 1788-ல் இராமநாதபுரம் மாவட்ட குணங்குடியில் தோன்றி, பல்வேறு இடங்களுக்குச் சென்று தவச்சிறப்பால் உயர்ந்து, சென்னையில் கி.பி. 1832–ல் சமாதி அடைந்தார். தமிழுலகில் கூறப்படும், தாயுமானவரின் மறு அவதாரமாகத் தோன்றியவர் குணங்குடியார் என்னும் கருத்து உறுதியாகும் அளவில் இருவரது பாடல்களும் ஒத்து அமைந்துள்ளமை கருதத்தக்கது.

இறைவனது எங்கும் நிறைந்த தன்மையைப் பாடிய தாயுமான வர், குணங்குடியார் இருவர்தம் பாடல்களும் கருத்தளவிலும் வடிவத்தி லும் ஒத்துள்ளமையை,

''அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி'' (தாயுமானவர்-1)

''அங்கிங்கென வொண்ணா அகண்டபரி பூரணமாய்
எங்கும் நிறைந்த இறையே நிராமயமே''
(குணங்குடியார்-நிராமயக் கண்ணி-17)

''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே'' (தாயுமானவர்-பரிபூரணானந்தம் இறுதிஅடி)

''பார்க்குமிடம் எல்லாம் பரிபூரணமாக
ஏர்க்கையுடன் நின்ற இயல்பே நிராமயமே''
(குணங்குடியார்-நிராமயக் கண்ணி-14)

என்னும் பாடல்களால் அறியலாம்.

இறைவனது ஆற்றலை வியந்து பாடுமிடத்தில் இருவர்தம் பாடல்களும் ஒத்திருப்பதை,

''ஆழாழி கரையின்றி நிற்கவிலையோ கொடிய
ஆலம் அமுதாக விலையோ'' (தாயுமானவர்-பரிபூரணானந்தம்–9)

''ஆழாழிதானும் அனைகடவது ஆணைதனிற்
தாழவிலையோ என்றாயே நிராமயமே''
(குணங்குடியார்-நிராமயக்கண்ணி-40)

என்னும் பாடல்களில் காணலாம்,

தன் நெஞ்சின் இயல்பினைப் பாடுமிடத்தில் இருவர்தம் கருத்தும்

''கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகுமென்
கல்நெஞ்சம் உருகவில்லை''
(தாயுமானவர்-சுகவாரி-7)

''கல்லுமொரு போதிற் கரைந்துருகு மென்மனக்
கற்கரைவ திலையை யனே''
(குணங்குடியார்-குருவணக்கம்–7)

என ஒத்து அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

சித்தர் கணத்தின் பெருமையைப் பாடும் போது தாயுமானவர்,

''திக்கொடு திகந்தமும் மனவேகமென்னவே
சென்றோடி யாடிவருவீர்'' (சித்தர் கணம்–1)

என்றார். குணங்குடியார் நாகூர் மீரான் தவராஜமகிமையைச் சாற்றும் பாடலில்,

''திக்குத் திகந்தமுங் கொண்டாடியே வந்து
தீன்கூறி நிற்பர் கோடி''

என்றார். இறைவனருளை வேண்டுமிடத்தில்,

''சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்'' (தாயுமானவர்–சுகவாரி–3)

' சொல்லு மெய்ஞ்ஞானச் சுகக்கடலை உண்டுயான்
சும்மா இருக்க அருள்வாய்''
(குணங்குடியார்–குருவணக்கம்–7)

எனப் பாடியுள்ள இருவர் கருத்தும் ஒத்திருப்பதையுணரலாம். இவ்வாறு தாயுமானவர். குணங்குடியார் பாடல்களில் நிறைய ஒப்புமையைக் காண முடிகிறதாயினும் விரிவஞ்ச வேண்டியுள்ளது.

சமய சமரசமும் ஆன்ம அனுபவமும்

அருட்பிரகாச வள்ளலார் குணங்குடியாருக்குப் பின்னர் கி.பி. 1823-இல் தோன்றியவர். இவர் பாடல்களில் குணங்குடியார் பாடல்களின் சாயல்களைக் காண முடியும். தாயுமானவர், குணங்குடியார், வள்ளலார் மூவர் பாடல்களிலும் சமய சமரச உணர்வை மிகுதியாகக் காணலாம். சித்தர்கள் சமரச நோக்கில் பாடியவராதலின் சித்தர் மரபில் வந்த இம்மூவரும் சமரச உணர்வை வளர்த்த மெய்ஞ்ஞானிகளாக மக்களால் போற்றப்பெற்றனர். தாயுமானவர் தம் குருவாம் மௌனகுரு வணக்கத்தில்,

''சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவாநுபூதி
மன்னவொரு சொற்கொண்டெனைத் தடுத்தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே"
(தாயுமானவர்–மௌனகுரு வணக்கம்–4)

எனப் பாடிய பாடலில், தம்மைச் சமயத் தளையில் கட்டுண்டு போகாதவாறு தடுத்து, சமரச சிவாநுபூதியை அருளி வாழ்வித்ததாகத் தம் குருவைப் போற்றியுள்ளார். வள்ளலார்,

''சாதியு மதமுஞ் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி''[57]

என்றும்

''சாதி சமயச் சழக்கை விட் டேனருட்
சோதியைக் கண்டேனடி—அக்கச்சி
சோதியைக் கண்டேனடி''[58]

என்றும் பாடினார். சமரச சுத்தசன்மார்க்கம் கண்டு மக்களுக்கு வழி காட்டினார். ஆதலின் தாயுமானவர், வள்ளலார் பாடல்களில் சமரச மெய்ஞ்ஞான உணர்வு மேலோங்கி நிற்பதைப் பலரும் அறிவர். இவ்விருவருக்கும் இடைக்காலத்தில் தோன்றிய குணங்குடியார் சமயத்தால் இசுலாமியராயினும் சமரச உணர்வினை உணர்த்துவதில் சித்தர் மரபில் சிறந்து விளங்கினார்.

''பெருகிவரு மானந்த சமரசப் பெருவாரி''
(முகியித்தீன் சதகம்-15)

''சாடாது சமய நிலை நின்று சமரசமீது
சார்ந்திடுவது எக்காலமோ?'' (முகியித்தீன் சதகம்-96)

எனப்பாடினார். இந்துமதக் கடவுளர் பெயரில் மனோன்மணிக்கண்ணி, நந்தீஸ்வரக்கண்ணி ஆகிய பாடல்களைப் பாடினார்.

''மன்றுள் நின்றாடு மெய்த்தவராஜ சிங்கமே''
(அகத்தீசர் சதகம்-4)

''தெக்ஷிணாமூர்த்தமே பக்ஷம்வைத் திக்கணஞ்
சின்மயம் அருள்புரியவும்'' (அகத்தீசர் சதகம்-7)

எனப்பாடிய பாடல்கள் யோக நெறிக்குரிய பொருளையுணர்த்தினும், அப்பொருளுக்குரிய சொற்கள் இந்துசமயக் கடவுள் தொடர்பாக அமைந்திருப்பதையும் சமயச் சார்பின்றிப் பொதுமையுள்ளத்தோடு பாடிய குணங்குடியாரின் உயரிய நோக்கத்தையும் உணர முடிகின்றது. சித்தர்களைப்பற்றி விளக்குமிடத்தில்,

> ''இஸ்லாம் மதத்தையும் இந்து மதத்தையும் சமரசப்படுத்த வேண்டுமென்று விரும்பி மஸ்தான் என்னும் இஸ்லாமிய ஞானிகள் பலர் வேதாந்த அனுபவக் கருத்துக்கு ஒப்பப்பாடி, மக்களிடையே வாழ்ந்து, அவர்கள் மனத்தினைக் கவர்ந்துள்ளனர்.
> குணங்குடி மஸ்தான் போன்றவர்கள் தமிழ் நாட்டில் பலர்''59

என்று அறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், சித்தர்கள் சமரச நிலையினர் என்பதையும், அவ்வழியில் இசுலாமியச் சித்தர்களும் விளங்கினர் என்பதையும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

குணங்குடியாரும் சித்தர்களின் அனுபவங்களும்

''சித்தர்களின் அனுபூதி அனுபவத்தில் வேற்றுமையில்லை. அதைக்கூறும் வருணனையிலேயே வேற்றுமையுள்ளது''60 என அறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் குறிப்பிட்டது போன்று இவர்களது ஆன்ம அனுபவத்தினைக் கூறும் முறையில் வேற்றுமை இருப்பினும் அனுபவ உணர்வு ஒன்றாகவே உள்ளது. வாசி என்ற மூச்சினை அடக்கி, மூலாதாரத்தில் ஒடுங்கியிருக்கும் மூலகுண்டலினி சத்தியைக் குருவருளால் மேலெழுப்பி மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களிலும் படிப்படியாக நிறுத்திப் பயிற்சியால் மேலே கொண்டு வந்து, சகஸ்ரதள கமலத்தினை (ஆயிரத்தெட்டு இதழ்தாமரை) மலரச் செய்து அதிலிருந்து வெளிப்படும் அமுதத் துளிகளையுண்டு யோகியர் பல்லாண்டிருப்பர் என்றும், தம் உடம்பினைப் பருவுடலிலிருந்து நுண்ணுடலாக, ஒளியுடம்பாக மாற்றிக் கொள்வர் என்றும், அவர்கள் கூடுவிட்டுக் கூடுபாய்தல் முதலான பல்வேறு சித்திகளில் வல்லவர்களாக விளங்குவர் என்றும் திருமந்திரம் முதலான யோக நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஆதாரமாகச் சொல்லப்படும் புருவமத்தி (கண்கள் இரண்டும் கூடும் நடுவிடம்) யோகநெறியில் இன்றியமையாததாகச் சொல்லப்படும். இவ்விடத்தைச் சுழுமுனை என்றும் ஆக்ஞை என்றும் கூறுவர். யோகியர் இவ்விடத்தில் கருத்தை நிறுத்திக் காண்பரிய பெரும் பொருளைக் காண்பர். இதனை எட்டு வகை யோகங்களுள் ஒன்றாகிய 'தியானம்' என்பர் திருமூலர்.

> ''தியானம் என்பது இடைவிடாது நினைந்திருத்தல். இடையீடுபட்டு எண்ணுவது தாரணை; இடையீடு படாது எண்ணுவது

தியானம். தியானம் எத்துணை வகை என்றும், அதனை எவ்வாறு செய்து பழக வேண்டும் என்றும் இங்கு ஆசிரியர் கூறுகிறார்.''61

என்பது, தியானம் என்னும் திருமந்திரப்பகுதிக்கு அறிஞர் ஜி. வரத ராஜன் கூறும் விளக்கமாகும். திருமூலர் தியானம் பற்றி இருபது பாடல்களில் சொல்லியிருக்கிறார்.

''ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே''62

என்னும் பாடலை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். திருமூலர் மரபில் வந்த தாயுமானவர்,

''கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்தொழுந் தெய்வமே''63

என்னும் பாடலில் தியானத்தினை உணர்த்தியிருப்பதை அறியலாம். அருட்பிரகாச வள்ளலார் இவ்வுண்மையை,

''கையறவி லாதுநடுக் கண்புருவப் பட்டு
கண்டுகளி கொண்டுதிறந் துண்டுநடு நாட்டு
ஐயர்மிக வுய்யும் வகை யப்பர்விளை யாட்டு
ஆடுவதென் றேமறைகள் பாடுவது பாட்டு''64

என்னும் கீர்த்தனையில் விளக்கியுள்ளார். புருவநடுக்காட்சியைக் குணங்குடியார்,

''நெற்றிவிழி வூடுநிலை நின்றோர் உளந்தனின்
நெளிந்ததே சோமயத்தை''65

எனவும்

''நாடுமோ முத்திவழி கூடுமோ நெற்றிவிழி
நல்லறிவு பந்தாடுமோ''66

எனவும், வ்வாறு பலவிடங்களில் பாடியுள்ளார். சித்தர்கள் ஒளிவழி

விளக்கினைத் தமக்கு அருளுமாறு பல பாடல்களில் இறைவனை வேண்டுகின்றார். மேலும் இவர் அவ்வொளியினை, 'கவியுமொளி', 'நாடுமொளி', 'தெளியுமொளி'' 'தோற்றுமொளி', 'செறியுமொளி' 'இலகுமொளி' 'ஆடுமொளி' 'எய்துமொளி' 'அவிருமொளி' 'இயையுமொளி' எனப் பல்வேறு சொற்களால் கூறி, அதனைத் தமக்கு ழங்குமாறு இறைவனை வாழ்த்தி வேண்டுகின்றார்.[67]

சுழுமுனைத்தலத்தில் இறைவனது ஒளிக்காட்சியைக் காணும் யோகியர் பல்வேறு வகையான காட்சியனுபவங்களையுடையவர்களாகப் பாடியுள்ளனர். இறைவன் ஆடும் அழகிய திருக்கூத்தினைக் காண்பதற்குரிய இடமாகவும், அதனையே பொன்னம்பலமாகவும் பாடியுள்ளனர். வள்ளலார் முற்பாடலில்'ஆடுவது' என்று கூறியதுடன் பல்வேறு பாடல்களில் இறைவனது இவ்வாடற் காட்சினைப்பாடியுள்ளதும் திருவருட்பாவில் விளங்குகிறது. யோக அனுபவங்களைக் கூறும் யோகசிகோபநிடதம் ஆறாவது அத்தியாயத்தின் எழுபத்தொன்பது சுலோகங்களில் குண்டலினிப் பயிற்சி பற்றியும், சுழுமுனை நாடியின் முக்கியத்துவம் பற்றியும் விளக்குகிறது. இதயத்தில் நூற்றொரு நாடிகள் உள்ளனவென்றும் அவற்றுள் தலையுச்சியைப் பற்றிநிற்கும் ஒரு நாடியே சுழுமுனை நாடி என்றும், அதன் இருபக்கங்களிலும் உள்ளவை இடை, பிங்கலை என்னும் நாடிகள் என்றும், வீணைதண்டத்தைப் போன்ற முதுகெலும்பில் (பிரம்மதண்டபம்) மிகநுண்ணிய துளையில் உள்ள பிரம்மநாடியே சுழுமுனை என்றும், அச்சுழுமுனையில் உலகமும் உலகப் பொருள்கள் யாவும் நிலைபெற்று விளங்குகின்றன என்றும் பல சுலோகங்களில் விளக்குகிறது.[68] மேலும், கடலிலும் கங்கையிலும் மூழ்கி மணி கர்ணிகையை வணங்குவதால் வரும் பயன் சுழுமுனையால் வரும் பயனில் பதினாறில் ஒரு கலைக்கும் ஒப்பாகாது என்பதை,

> கங்காயாம் ஸாகரே ஸ்னாத்வா நத்வாச மணிகர்ணிகாம்
> மத்யநாடீ விசாரஸ்ய கலாம் நார்ஹந்தி ஷோடஸீம்''[69]

என்னும் சுலோகம் குறிப்பிடுகிறது. சுழுமுனைவழியே அமுதமண்டலத்தினையடைந்து சமாதியில் நிலைபெற்று, மரணமிலாப் பெருவாழ்வினை யோகிகள் அடைவர் என்பதை இவ்வுபநிடதம் மேலும் பல சுலோகங்களில் விளக்குகிறது.

குணங்குடியார் சுழுமுனையில் இறைவன் திருநடனக் காட்சியை

''நாவிட்டு ரைக் கொணாச் சோதி நயனத்தூடு
நடனமிட வருள் புரியவும்''[70]

எனப்பாடி, இவ்வாறு அருள்புரிய,

''மயில்வெட்கு நடனமொடு தவராஜசிங்கமே
வரவேண்டு மென்ற னருகே''[71]

எனவும் அகத்தீசர் சகத்தில் வேண்டுகின்றார். மேலும்

''பாயுமீ ராறுகலை பாயாது பக்குவம்
பண்ணிவைப் பதுச மாதி
பழவினை யிறக்கவுஞ் சுழுமுனைதிறக்கவும்
பழகிருவரு வதுச மாதி''[72]

என்னும் பாடலில் சுழுமுனைப் பயிற்சியைக் கூறியுள்ளார்,

குணங்குடியார் பாடல்களில் அகத்தீசர் சதகம் முழுவதும் குருவருள்நிலை, தவநிலை, துறவுநிலை, இயமநிலை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமாதி நிலை ஆகிய பலநிலைகளில் யோக அனுபவங்களையும், பல்வேறு சித்திகளையும் விரிவாக விளக்கியுள்ளார். இவர்தம் அருட்பாடல்கள் பிறவற்றிலும் சித்தர் நெறியனுபவங்கள் சிறப்பாகக் கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

இதுகாறும் கண்டவற்றால், குணங்குடி மஸ்தான் என்னும் மெய்ஞ்ஞானி தமிழ் மண்ணில் தோன்றிய சித்தர் மரபில் வந்தவர் என்பதையும், இவர் பாடல்களில் சித்தர் பாடல்களின் செல்வாக்கு நிறைந்திருப்பதையும், இவரது பல்வேறு வகை அனுபவங்கள் இவருக்கு முன்பிருந்த சித்தர்கள், அருளாளர்களின் அனுபவங்களுடன் ஒத்திருந்தன என்பதையும் அறிய முடிகிறது. மேலும், இவரது உள்ளார்ந்த ஆன்ம அனுபவங்களைப் பாடல்கள் முழுமையும் சிறப்பாக விளக்கியுள்ளார். இவ்வனுபவங்களை விரித்துக் காண்பது யோக வழியில் பயிற்சியும் அனுபவமும் நிறைந்தவராலேயே முடியுமாதலின், ஓரளவில் இவரது சிறப்பினை எடுத்துக்காட்டும் நோக்குடன் இக் கட்டுரை நிறைவு பெறுகிறது.

அடிக்குறிப்புகள்

1. கழகத் தமிழ்க்கையகராதி, சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம்.
2. பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், **சித்தர்கள் கலைக்களஞ்சியம்**, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956. தொகுதி–4.
3. மு நூ.,
4. சித்தர் வைத்தியலிங்கனார் கட்டுரையாளரிடம் நேரில் கூறக் கேட்டது,
5. அல். அப்துல்ரெசாக், ஊர்நல அலுவலர், மன்னார்குடி. கட்டுரையாளர் நேரில் கேட்டது.
6. மகாவித்துவான் ஆறுமுக நாவலர், **இந்துமதபாலபாடம்** பக்-17-18.
7. தாயுமானவர் — பராபரக்கண்ணி 157.
8. திருமந்திரம் — பா-552.
9. மு.நூ. — பா-551.
10. திருத்தணி என். ஏ. ரஷீத், முன்னுரை, **மஸ்தான் சாகிபு பாடலும் உரையும்** ஞானவள்ளல் பதிப்பகம், சென்னை-35, 1977. பக்-60
11. சிவயோகி ஐயாசாமி முதலியார் பாடிய தோத்திரப்பா - பா-13 **மஸ்தான் திருப்பாடல் திரட்டு.**
12. திருத்தணிகை சரவணப் பெருமாளையர், மஸ்தான் நான்மணி மாலை பா–4.
13. மு.நூ., — பா–7
14. காயப்பட்டினம் செய்கப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் பாடிய வாயுரை வாழ்த்து.
15. திருமந்திரம் — பா–85
16. மு.நூ., — பா-67
17. மு.நூ., — பா-1581
18. மு.நூ., — பா-54
19. மு.நூ., — பா-139

20. மு.நூ., — பா-1680

21. திருவாசகம் — 4-75-76

22. தாயுமானவர் - மௌனகுரு வணக்கம் - அனைத்துப்பாடல்களின் இறுதியடியும்

23. மஸ்தான் திருப்பாடல் திரட்டு – குருவணக்கம் - பா–1

24. மு.நூ., — பா–3

25. மு.நூ., — பா–5

26. மு.நூ., — பா-6

27. மு.நூ., — பா-8

28. மு.நூ., — பா-10

29. திருமந்திரம் — பா-2355

30. திருவாசகம் — பா-10–2

31. மு.நூ., — 22-5

32. தவத்திரு. குன்றக்குடி அடிகளார், **நமது நிலையில் சமயம் சமுதாயம்** பக்-18,19.

33. மஸ்தான் திருப்பாடல் திரட்டு–குருவணக்கம் பா-4

34. மு.நூ., — பா-9

35. மு.நூ., — பா-7

36. திருமந்திரம் — பா-1477

37. மு.நூ., — பா-1479

38. பல்கலைச்செல்வர் தெ.பொ.மீ, கலைக்களஞ்சியம்-தொகுதி-4

39. திருமந்திரம் — பா-2615

40. மஸ்தான் திருப்பாடல் திரட்டு–முகியித்தீன்சதகம்-பா-50

41. மு.நூ., — பா-51

42. மு.நூ., — பா-52

43. திருவாசகம்–சிவபுராணம்-75-77

44. மஸ்தான் திருப்பாடல் திரட்டு–முகியித்தீன் சதகம்-பா-4

45. மு.நூ., — பா–2

46. மு.நூ., — பா-4

47. திருக்குறள் — 10

48. மஸ்தான் தி. திரட்டு-குருவணக்கம்-பா-6

49. திருக்குறள் — 336

50. மஸ்தான் தி. திரட்டு-ரகுமான் கண்ணி–37

51. இடைக்காடர், திருவள்ளுவமாலை.

52. மஸ்தான் தி. திரட்டு-குருவணக்கம்-பா-3

53. பட்டினத்தார்-திருவேகம்பமாலை-பா-13 **சித்தர் பாடல்கள்,** பூம்புகார் பிரசுரம்.

54. இடைக்காட்டுச்சித்தர்–பா–18, **சித்தர் பாடல்கள்,** பூம்புகார் பிரசுரம்

55. மஸ்தான் தி. திரட்டு–தவமே பெறவேண்டுமெனல் பா-7

56. சிலம்பொலி சு. செல்லப்பன், அணிந்துரை, திருத்தணி என்.ஏ. ரஷீத் உரைநூல் பா–42

57. திருவருட்பா–அருட்பெருஞ்சோதி அகவல் 24-106-107

58. மு.நூ., – கீர்த்தனைப்பகுதி-அருட்காட்சி-3

59. பல்கலைச்செல்வர் தெ.பொ.மீ, **சித்தர்கள்,** கலைக்களஞ்சியம் தொகுதி-4

60. மு.நூ.,

61. ஜி. வரதராசன், திருமந்திரஉரை–தொகுதி-1, பா-285

62. திருமந்திரம்-பா–600

63. தாயுமானவர்-பொன்னை மாதரை-பா–75

64. திருவருட்பா–கீர்த்தனைப்பகுதி–நாமாவளிகள்-40

65. மஸ்தான் தி. திரட்டி–முகியித்தீன் சதகம்-பா–38

66. மு.நூ., — பா-50

67. மு.நூ., — பாடல்கள் 35,36,37,38,39,40,41,42,43,44,

68. யோக சிகோபநிஷத் — 6– 1-16

69. மு.நூ., — 6–41

70. மஸ்தான் தி. திரட்டு — அகத்தீசர் சதகம் – தவநிலை பா-3

71. மு.நூ., — ,, பா-4

72. மு.நூ., முகியித்தீன் சதகம் - பா-55

துணை செய்த நூல்கள்

1, கழகத் தமிழ்க் கையகராதி

2. கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக்கழகம் 1956, தொகுதி-4

3. குணங்குடி மஸ்தான் திருப்பாடல் திரட்டு - இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை,

4. சித்தர் பாடல்கள், பூம்புகார் பிரசுரம் 1976,

5. தாயுமானவர் பாடல்கள், கழகம், 1974,

6. திருமந்திரம் – ஜி, வரதராஜன் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1988, 3 தொகுதிகள்.

7. திருவருட்பா - கீர்த்தனைப்பகுதி, ஆ. பாலகிருட்டிணப்பிள்ளை (பதி) 1961

8. திருவருட்பாத்திரட்டு - கழகம், 1977,

9. திருவாசகம் சி. அருணை வடிவேல் முதலியார் உரை, தருமையா தீனம், 1966,

10. மஸ்தான் சாகிபு பாடலும் உரையும். திருத்தணி என் ஏ. ரஷீத் உரை - 1977

11. யோக சிகோப நிஷத், பழனி ஸ்ரீ சாது முனிவரின் சீடர் திருமூர்த்தி சுவாமி உரை, ஸ்ரீஸரஸ்வதி வளாக வெளியீடு, 1957

12. ஆறுமுக நாவலர், மகாவித்துவான் – **இந்துமத பாலபாடம்** தமிழ் நாடு தெய்வீகப் பேரவை, 1970

13. குன்றக்குடி அடிகளார், தவத்திரு, **நமது நிலையில் சமயம், சமுதாயம்**, சென்னைப் பல்கலைக்கழகம், 1975,

இந்துமதம்-சீக்கியமதக் கோட்பாடுகள்-ஒப்பியல் நோக்கு

ஆய்வாளர் அ. நடராசன்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

4. இந்துமதம் சீக்கியமதம் - சில வேறுபாடுகள்

இந்து மதத்தைப் பற்றியும் அதன் போதனைகளைப் பற்றியும் நன்கு கற்றறிந்த நானக்கு அதனின்று வேறுபடுத்திப் புதிய சமுதாயத்தை உருவாக்க முயன்றார். குருநானக்கும் அவருக்குப் பின் அவர் வழிவந்த சீக்கிய குருக்களும் இந்து மதத்திலிருந்த பல வேண்டாத சடங்கு முறைகளையும், பழக்கங்களையும் வெறுத்தனர். இந்து மதத்தில் சாதி வேறுபாடு காரணமாகச் சமுதாயம் சீரழிவதைக் கண்டு வெதும்பி அதை மாற்ற உறுதி கொண்டனர். புதிய எண்ணம்' புதிய நோக்கு, புதிய அணுகுமுறை, புதிய சமுதாயம் படைக்க முயன்றனர். இதன் காரணமாக இந்து மதத்தினின்று சீக்கியமதம் பல வகைகயிலும் வேறுபட்டது.

4 1. இறைவழிபாடு

இந்து மதத்தில் உருவ வழிபாடு உண்டு. ஆனால் சீக்கிய மதம் உருவ வழிபாட்டில் நம்பிக்கையற்றது. இந்து மதத்தில் சிவன், பிரம்மா, விட்டுணு இந்திரன், சந்திரன், தேவி, தேவியர் என்று பல உருவங்கள் சுட்டப்படுகின்றன. இதில் சீக்கியத்துக்கு நம்பிக்கை இல்லை என்பதை அறிய முடிகிறது.

''குருவே சிவன், குருவே விஷ்ணு, குருவே பார்வதி
குருவே லக்குமி, குருவே சரஸ்வதி
நான் இறைவனை அறிந்திருந்தும்
என்னால் அவனை விவரிக்க முடியவில்லை''[8]

என்று கூறி இறைவன் ஒருவனே அவனும் உருவமற்றவனே என்கிறார் குருநானக்கு

இறைவன் உருவமற்றவன்; எங்கும் நிறைந்திருக்கக் கூடிய வன் என்பதும் இறைவனின் நாமம் ஒன்றே என்பதும் சீக்கியத்தின் போதனைகளாகும். இறை வழிபாடு, சமுதாயச் சேவை, பிணி என்ற இவை மூன்றுமே சீக்கியத்தின் இன்றியமையாத குறிக்கோள்களாகச் சுட்டப்படுகின்றன.

''தேவன் தேவதைகள் வணங்கப்படுகின்றன
அவைகள் ஒருவன் என்ன கேட்கமுடியும்?
அந்தக்கல் எப்படிக் கொடுக்கமுடியும்?
கல் தண்ணீரால் நீராட்டப்படுகிறது ஆனால்
அவர்கள் பாவத் தண்ணீரில் முழுகுகிறார்கள்
பிறவிக் கடலைக் கடக்க இதுபோன்ற
பாத்திரங்கள் (சிலைகள்) தேவையற்றவை''[9]

என்பது சீக்கியர்களின் கொள்கையாக இருப்பதைக் காணலாம். இந்து மதத்தில் உள்ள உருவ வழிபாட்டு முறைகள் பற்றிச் சீக்கியக் குருமார்கள் இவ்விதம் பலவாறாக விமரிசனம் செய்கின்றனர். உருவமற்றவன் இறைவன். அவன் நம்மைப் பார்க்கிறான்; ஆனால் நம்மால்அவனைப் பார்க்க முடியாது. உருவ மற்ற அவனுக்குக் கல்லால் உருவம் கொடுப்பது ஏமாற்று வேலையாகும் என்பது சீக்கியத்தின் எண்ணமாகும்.

4.2. உயிர்கள்

உயிர்களைப் பற்றிய கருத்தில் சீக்கியமும் இந்து மதமும் வேறுபடுகின்றன. இந்து மதக் கடவுள்களான பிரம்மா, விட்டுணு, சிவன் முறையே உயிர்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்வதாக இந்து மதம் சுட்டுகிறது. ஆனால் உயிர்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றை யாரும் தனித்தனியே செய்ய வில்லை என்று மறுக்கிறது சீக்கியம். இறைவன் ஒருவனே! அவனே படைக்கிறான்; காக்கிறான்; அழிக்கிறான். அவனன்றி உயிர்கள் செயல்படுவதில்லை அவனே உயிர்களை உருவாக்குபவன் என்பது சீக்கியத்தின் நம்பிக்கையாகும்.

4.3. பசு பூசனை

சீக்கிய மதம் இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாரையும் வணங்குதல் கூடாது என்கிறது. பசுவைப் பூசை செய்தல் சீக்கிய மதத்தில் இல்லை. இந்து மதத்தின் தத்துவ அடிப்படையில் சீக்கிய மதமும் இந்து மதமும் பசு பூசையில் ஒன்றுபடுகின்றன. ஆனால்

கிராம இந்துக்களிடம் இந்தப் பழக்கம் வேறுபடுகிறது. கிராமங்களில் பசுவைத் தெய்வமென மதித்துப் பூசை செய்யும் பழக்கம் இந்து மக்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. மேலும் பிராமணர்களுக்குப் பசுவைத் தானமாக வழங்கும் பழக்கமும் உண்டு. இவை இரண்டுமே சீக்கிய மக்களிடம் காணப்படவில்லை. வெறுத்து ஒதுக்கிவிட்டனர். பசு சீக்கியர்களால் மதிக்கப்படுகிறது, பசு வதையும், பசுவின் உணவு உண்பதையும் இந்துக்களைப் போலவே வெறுக்கின்றனர். ஆனால் பசுவுக்கெனத் தனியே தெய்வமென மதிப்புத் தருவதோ அதற்குப் புனிதத்தன்மை இருப்பதாகவோ கருதிப் பூசை செய்வதில்லை.

4.4. சாதிப்பிரிவு

இந்து மதத்தில் பல்வேறு சாதிப் பிரிவுகள் காணப்படுகின்றன. சத்திரியன், பிராமணன், வைசியன் சூத்திரன் என்றும், பின் அவைகளுக்குள்ளும் பல பிரிவுகள் என்றும் மக்களைச் சாதி எனும் பெயரால் பிரித்து வைத்தனர். 'சாதிக்கட்டுப்பாடுகள் இந்து மதத்தில் மிகவும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற பேதத்தை வேதங்களும் புராணங்களுமே பிரித்துக் காட்டின.

''ஒரு சூத்திரன் பிராமணப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்ய நினைப்பது சமுதாயத்தில் மிகவும் 'மோசமான செயல்''[10] என்று அக்காலச் சாதிச் சூழலை ஆர்.ஜி. மிஜூம்தேவும், ஏ.டி. புசால்கரும் தெளிவுபடுத்துகின்றனர்.

பகவத் கீதையும் சாதிப் பிரிவைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு சுட்டுகிறது.

''உன்னுடைய குலத்தொழிலை நீயேசெய்
பிறருடைய தொழிலை நீ செய்வாயேயானால்
அது மிகப்பெரிய ஆன்மீகக் குற்றமாகும்''[11]

இந்து மதத்தில் இருந்த இத்தகைய சாதிப் பிரிவுகளினால் மக்கள் அடைந்த துன்பங்களைச் சீக்கியக் குருக்கள் நேரில் கண்டனர். சாதிப்பிரிவு பொருள் மற்றது என்று கூறிச் சாதி முறையை வெறுத்-தனர்.

"சத்திரியனும் பிராமணனும்
வைசியனும் சூத்திரனும்
எனஇருந்தாலும் அவர்கள்

இறைவன் பெயராலேயே
நீச்சல் போடவேண்டும்''[12]

என்றும்,

''அவன் திறமையின் ஒளியைக்கவனி
சாதியைக் கேட்காதே
சாதியென்பதே இல்லை''[13]

என்றும் சாதிப்பிரிவைச்சாடுகிறார் குருநானக்கு அவரைத் தொடர்ந்து வந்த குருமார்களும் போதகர்களும் சாதியை ஒழிக்கப் பாடுபட்டனர்.

''நான்கு வருணங்களும் ஒன்றாக இணைந்தன
குருநானக்கு
உலகுக்குச் சேவை செய்ய வந்துவிட்டார்''[14]

என்று குறிப்பிடுகிறார் பாய்குருதாசு.

அமிர்தசரசில் உள்ள பொற்கோவிலில் நான்கு திசைகளிலும் நான்கு வாயில்கள் உள்ளன. இது அனைவரும் பொதுவானவர்கள், சமமானவர்கள் என்பதைக் காட்டும் சின்னமாகும். கபீர், பைப்பர், இரவிதாசு (செருப்புத் தைப்பவர்) மர்தானா போன்ற பல இனத்தவர்களின் போதனைப் பாடல்களும் ஆதிகிரந்தத்தில் காணப்படுதலையும் சான்றாகக் காட்டமுடியும்.

4.5. திருமண வழக்கம்

இந்து மதத்தில் திருமண நாள் புரோகிதர்களால் நிச்சயிக்கப்படுவதை அறியலாம். ஆனால் சீக்கிய மதத்தில் மணமகன், மணமகள் பெற்றோர்கள் தங்கள் உறவினர்களோடு கலந்து பேசி, தாங்களே முடிவு செய்கின்றனர். திருமணச் சடங்குகள் சீக்கிய மதத்தில் மிகவும் எளிமையான முறையில் குறுகிய நேரத்தில் நடைபெறுவதைக் காண முடிகிறது. இந்து மதத்தில் புரோகிதர் மந்திரம் ஓதி அது பல நாட்கள் நடக்கும் நிலை காணப்படுகிறது. புரோகிதர் சீக்கியர்களின் திருமணத்திற்கு வருவதில்லை. மந்திரம் ஓதுவதில்லை. மணமக்கள் நெருப்பைச் சுற்றும் பழக்கம் இந்துக்களிடம் உண்டு.ஆனால் சீக்கியர்களிடம் நெருப்பைச் சுற்றும் பழக்கம் காணப்படவில்லை. ஆதிகிரந்தத்தைச் சுற்றி வந்து வணங்குகின்றனர். சீக்கியர்களின் திருமணத்தில் ஆதிகிரந்தத்தின் பாடல்கள் பாடப்பட்டு வணங்கப்படுகின்றன. கிரந்தத்தைச் சாட்சியாக வைத்தே திருமணம் செய்யும் வழக்கம் சீக்கியர்களிடம் காணப்படுகிறது.

4.6. கங்கை புனிதமா?

கங்கை நீர் புனிதமானது என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆனால் கங்கை நீரைப் புனிதம் என்பதைச் சீக்கியம் மறுக்கிறது. வாரணாசியில் உள்ள ஆறுகளுக்குத் தனியே என்ன சிறப்பு என்ற வினா இதனால்எழும்புகிறது.

இறந்தவர்களின் சாம்பலைக் கங்கையில் கரைத்தால் அவர்கள் மோட்சமடைவர் என்பது இந்துக்களின் நம்பிக்கை, சாம்பலைக் கங்கையிலோ ஆற்றிலோ கரைக்கும் பழக்கம் சீக்கியத்தில் இல்லை.

''நீராடுகிறார்கள் வெளிப்புறம் சுத்தமானால் போதுமா?
உள்ளத்தூய்மை வேண்டாமா?
இதயச் சுத்தம் வேண்டாமா?
தன்னைக் கட்டுப்படுத்த வேண்டாமா?
திருடன் என்னதான் கங்கையில் நீராடினாலும்
அவன் திருடனே''[15]

என்று குறிப்பிடுகிறது ஆதிகிரந்தம்.

ஆனால் அமிர்தசரசில் உள்ள அமுதக் குளத்தில் மனத்தூய்மையோடு, இறைவன் மீது உண்மையான பக்தியோடு நீராடினால் இறைவனை அடையலாம் என வலியுறுத்துகிறது.

4.7. அசைவம்

அசைவம் பற்றிச் சீக்கியத்தில் குறிப்பிடத்தக்க எந்தக் கட்டுப்பாடும் இல்லை. மாமிசம் உண்ணலாம். சீக்கியத்தில் 'ஜடகா'[16] (killing by one stroke) அனுமதிக்கப்படுகிறது. உயிர்களை வேதனைப்படுத்திக்கொல்வதை விரும்பவில்லை.எனவே ஒரே வெட்டில் வெட்டி அந்தக் கறியை உண்ணலாம் என்பது சீக்கியர்கள் பழக்கம். உணவு வகை தனிமனிதனின் விருப்பத்தைத் பொறுத்து அதை அவர்களின் விருப்பத்கை கேற்ப ஒதுக்கிவிடுகிறது சீக்கியம். அதிகமின்றிக் குறைவாக மது அருந்தலாம். இது இயற்கையின் காரணத்தால் குளிர் அதிகமாக இருக்கும் காலங்களில் குளிரைப் போக்க மது அருந்துவதற்குச் சீக்கியத்தில் இடமுண்டு. பலியிடும் பழக்கம் இல்லை.

4.8. சூரியனை வணங்குதல்

சூரியனை வணங்கும் முறை இந்து மதத்தில் காணப்படுகிறது. ஆனால் சீக்கிய மதத்தில் சூரிய வழிபாடு காணப்படவில்லை.

மூதாதையர் வழிபாடு (Ancestor worship) இந்து மதத்தில் உண்டு. சமாதி கட்டி முன்னோரை வணங்கும் பழக்கம் இந்துக் களிடம் காணப்படுகிறது. ஆனால் சீக்கிய மதத்தில் இவை இல்லை.

பூசாரி பிராமணனாக இருக்க வேண்டும் என்பது இந்து தருமம். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பிராமணன் தரகனாக இருப்பதைச் சீக்கிய மதம் கண்டிக்கிறது. எனவே சீக்கியக் குருது வாராக்களில் பூசாரி எந்தச் சாதியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். பூசாரி பிராமணராகவே இருக்க வேண்டும் என்பதில் சீக்கியத்துக்கு உடன்பாடில்லை.

4.9. தொட்டால் தீட்டு

சூத்திரனைத் தொட்டால் தீட்டு என்பது சீக்கியத்தில் காணப் படவில்லை. பிறப்பால் ஒரு மனிதன் உயர்ந்தவனில்லை; தாழ்ந்த வனில்லை. வெறும் உடலைக் கழுவுவதால் ஒருவன் தூய்மையாகிவிட முடியாது. மனத் தூய்மை வேண்டும்; சகோதரத்துவம் வேண்டும், தன் வாழ்நாளில் ஒருவன் செய்யும் செயல்களை வைத்தே அவன் நல்லவனா? தீயவனா? என்பதை இறைவன் முடிவு செய்கிறான் என்பது குருநானக்கின் வாக்கு.

> ''உயிர்களின் செய்கைகளும் கருமங்களும்
> இறைவனால் கண்காணிக்கப் படுகின்றன
> நல்லவையும் தீயவையும் இறைவனின்
> இராச சபையில் நீதிக்குட்படுகின்றன''[17]

எனவே மனிதனின் பிறந்த குலத்தை வைத்து அவனை இழிவான வனாகக் கருதக்கூடாது. அவனைத் தொட்டால் தீட்டு என்பது சமுதாயத்துக்கு விளைக்கும் பாவமான செயலாகும் என்கிறது சீக்கியம்.

தொட்டால் தீட்டு என்பதும், உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என்பதும் இந்து மதத்தில் பிராமணர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. அது சீக்கியத்தில் இல்லை.

4 10. சமய அடையாளங்கள்

சீக்கியனை அடையாளம் காண அவர்களுக்கு ஐந்து சமய அடையாளங்களைக் குருக்கள் வழங்கினார்கள். இது இந்து சமயத்தி

லிருந்து வேறுபட்டதாகும். சீக்கியர்களின் சமய அடையாளங்கள் ஐந்தும் ஒவ்வொரு சீக்கியரிடமும் காணப்படும். அவை,

1. கச்சா
2. கிர்பான்
3. காரா
4. கேசசு
5. கங்கா

இவைகளை ஐந்து K's (Five K's) எனச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றனர். இந்து மதத்தில் நெற்றியில் திலகமிடல் வழக்கம் உண்டு. ஆனால் சீக்கியத்தில் அது இல்லை.

4.11. புனித நூல்

வேதத்தின் தலைமை அதிகாரமும் இந்துக்களின் புனித நூலான பகவத் கீதையையும் இந்துக்கள் உயிராக மதிக்கின்றனர். ஆனால் அவைகளைச் சீக்கியம் ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களுக்கெனத் தனியே புனிதநூலைக் கொண்டுள்ளனர். பத்துக்குருமார்களின் போதனைகள் அடங்கிய நூலான 'ஆதிகிரந்தமே' அவர்களின் புனித நூலாகும். காலை மாலை பிரார்த்தனைகளில் ஆதிகிரந்ததிலுள்ள சில பகுதிகள் பாடப்படுகின்றன. ஆதிகிரந்தத்திலுள்ள 'அர்தாசு' என்ற பகுதி காலைப் பிரார்த்தனையாகவும்' 'ரஹிராசு' என்ற பகுதி மாலைப் பிரார்த்கனையாகவும், 'கீர்த்தன் சொகில்லா' என்ற பகுதி இரவு படுக்கைக்குப் போகு முன்பும் பாடிப் பிரார்த்தனை செய்து இறைவனை வணங்கும் பழக்கம் சீக்கியத்தில் உண்டு. இந்துக்கள் பகவத் கீதையின் போதனையைப் பாடுகின்றனர்.

4.12. இறைவனை வணங்கும் முறை

இறையை வணங்கும் முறைகளில் இந்து மதத்திலிருந்து சீக்கிய மதம் வேறுபடுகின்றது. இந்து மதத்தில் தீபாராதனை, மணி அடித்தல், சூடன் ஏற்றுதல், இறைவன் திருமேனியை நீராட்டுதல் போன்ற முறைகள் உண்டு. ஆனால் சீக்கியத்தில் இவை இல்லை. மேலும் இதுபற்றிக் குருநானக்கு விமரிசனம் செய்கிறார்.

தன்னுடைய யாத்திரையின் போது குருநானக்கு ஒருமுறை ஒரிசாவில் உள்ள பூரி செகனாதர் கோவிலுக்குச் சென்றிருந்தார். மாலையில் இறை வழிபாட்டுக்குச் சென்றார். கோவில் பூசாரிகள் பூசைக்கு ஏற்பாடு செய்தனர். மாலைப் பூசையின் உச்சகட்டமான

'தீபாராதனை' காட்டப்பட்டது. ஆனால் குருநானக்கு ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தார். ஆரத்தி முடிவடைந்தவுடன் பூசாரி அனைவருக்கும் பிரசாதம் வழங்கும்பொழுது குருநானக்கைக் கண்டு, நீ உடல்நலமற்றவனா? ஏன் ஆரத்திப் பூசையில் கலந்து கொள்ளவில்லை என வினவினார்.

'எங்கே கடவுள்?'—இது நானக்கின் கேள்வி.

'நீ குருடனா என்ன? இறைவன் சிலை உன் கண்முன்னால் இருப்பது உன் கண்களுக்குத் தெரியவில்லையா?' இது பூசாரியின் மறுகேள்வி.

'நானா குருடன்? எப்படி கல் இறைவனாக முடியும்? மனிதனின் கற்பனைக்கு எட்டக் கூடியவனா அவன்?' எனப் பதில் தந்தார் நானக்கு.

'சாக்கிரதையாகப் பேசு' - பல குரல்கள் கேட்டன.

''நான் உண்மையைத்தான் சொல்கிறேன். இறைவன் கல்லாலோ மரக்கட்டையாலோ ஆனவன் அல்லன். உண்மையான மனத்தில் அவன் குடி கொண்டுள்ளான்; நிறைந்துள்ளான். உருவமற்றவன் அவன். அவனே உருவாக்குபவன். நான் அவனை வணங்குகிறேன்'' என்றார் பின் கீழ்க்கண்ட பாடலைப் பாடினார்.

''இறைவா!
உனக்கு ஆயிரம் கண்களுண்டு எனினும் உனக்குக் கண் இல்லை
உன் வடிவம் ஆயிரம் எனினும் உருவமற்றவன் நீ
உன் தாமரைமலர்ப் பாதங்கள் ஆயிரம்
எனினும் நீ பாதமில்லாதவனாய் இருக்கிறாய்
உனக்கு மூக்கு ஆயிரம் எனினும் நீ மூக்கில்லாதவனாய்
இருக்கிறாய்
இறைவா உன்னுடைய விளையாட்டு
என்னை வசீகரித்துவிட்டது''[18]

' என்ன வகையான ஆரத்தி அது?
ஓ, பயத்தால் நிலை குலைந்தவர்கள், இது உண்மையான பிரார்த்தனையாகுமா?''[19]

இச்செய்தி நானக்கு தேவையற்ற வணங்கும் முறைகளை வெறுத்தார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. உள்ளன்போடு, உண்மையான பக்தி

இருந்தால் போதும். ஆரத்தி, மணி அடித்தல், சூடன் ஏற்றுதல், நீராடுதல், சிலையை வைத்து வணங்குதல் எல்லாம் மக்களை ஏமாற்றும் வேலை என்பது நானக்கின் வாதம். சீக்கிய மதத்தில் இத்தகைய வழிபாட்டு முறைகள் ஒதுக்கப்பட்டன.

4.13. அவதாரம்

இந்து மதத்தில் இறைவனின் அவதாரங்கள் சுட்டப்படுகின்றன. விட்டுணுவின் அவதாரங்கள் பற்றிய செய்திகள் உண்டு. ஆனால் சீக்கியத்தில் அவதாரம் என்பது இல்லை. அவதாரம் பற்றி விமரிசிக்கப்படுகிறது. இறைவன் ஒருவனே! அவன் பிறப்பற்றவன். அவன் இறப்பற்றவன். மனிதனே இறைவனாகலாம் என்பது சீக்கியத்தின் தத்துவமாகும்.

4.14. மொழி

சீக்கிய மதத்துக்கும் இந்து மதத்துக்கும் உள்ள மற்றொரு வேறுபாடு மொழியாகும். இந்து மதத்தின் புனித நூல், போதனை நூல்கள் சமற்கிருதத்தில் உள்ளன. கோவில்களில் சமற்கிருதத்திலேயே மந்திரம் சொல்வது என்ற முறையைப் பிராமணர்கள் கடைப்பிடிக்கின்றனர். சீக்கியப் புனித நூல்கள் குருமுகியில் உள்ளன. இறைவனை எந்தமொழி கொண்டும் வணங்கலாம் என்கிறது சீக்கியம். இதுவே குருவின் போதனையாகும் சீக்கியக் குருக்களின் போதனைகள் பர்சியன், சமற்கிருதம், இந்தி, அராபி, பஞ்சாபி போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. ஆதிகிரந்தத்தில் இத்தகைய பல மொழிகளில் எழுதப்பட்ட பாடல்களைக் காணலாம்.

4.15. ஆறு முறைகள்

இந்து மதத்தில் வேதாந்தம், யோகா, நயாயா, சர்வகா, உத்தமீர மாம்சா, புர்வி மிமாசா போன்ற ஆறு முறைகள் சுட்டப்படுகின்றன. இவைசீக்கியத்தில்இல்லை.இம்முறைகளை நானக்கு வெறுத்தார். இறைவனை அடைய ஒரே வழியே உண்டு. இதை நானக்கு தெளிவுபடுத்துகிறார்.

கராச்சியில் பண்டிதர்களும், பூசாரிகளும் நானக்கிடம் ''இந்து மதத்தில் ஆறு முறைகள் இருக்கின்றன. அவைகளில் நீங்கள் எந்த முறையைப் பின்பற்றுகிறீர்கள்'' என்று கேட்டனர். உடனே நானக்கு பாடுகிறார்,[20]

''அங்கு ஆறு புனிதங்கள், ஆறு போதகர்கள்
ஆறுமுறைகள் உள்ளன. ஆனால்
இறைவன் ஒருவனே உயர்போதகன்
அவனே எல்லாமாக வியாபித்துள்ளான்
அவனே எல்லா மார்க்கங்களிலும் தெளிவாய் இருக்கிறான்
ஓ! .. இறைவா! அவ்வழியில் உன்புகழ் பாடப்படுகிறது
எனக்கு அந்த நல்வழியைக் காட்டு
அதுவே மதிக்கத்தகுந்த புகழ்''[21]

எனவே இறைவனை வணங்க, அவனை அடைய ஆறு முறைகள் என்பது நானக்கின் கருத்து.

4.16. துறவு

இல்லறத்திலிருந்து துறவு கொண்டு தவம் மேற்கொள்ள வேண்டும் என்பது யோகிகளிடம் இருந்தது. சைனர்களிடமும் இது காணப்பட்டது. ஆனால் இல்லறத்துறவு தனிப்பட்ட தொழில் என் கிறார் நானக்கு. சீக்கிய மதம் இதை வெறுக்கிறது. ஒதுக்கித் தள்ளு கிறது.

> ''துறவு பற்றிய அடிப்படை நினைவு இறைவனுக்கும் இயற்கைக்கும் உள்ள போட்டியில் மனிதன் தேர்ந்தெடுக்கவேண்டும்''[22]

> ''மாயா அல்லது அளவு மனத்தின் செயல் முறைகளை இனவாரியாகப் பிரிப்பது. இயற்கை இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒருவனின் மனத்தில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமானது மாயா''[33]

எனவே இறைவனை அடைய இல்லறம் தடையில்லை என்பதைச் சீக்கியம் வலியுறுத்துகிறது.

> ''இந்துமதம் மாயைக்கும், இயற்கைக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்தவில்லை. புலனறிவு உறுதிப்படுத்துகிறது. பெண்கள் கவரக் கூடியவர்கள் மட்டுமல்லர் இந்த இயற்கை உலகில் பிறப்புக்கும் மாயையின் அவதாரங்களுக்கும் மூலாதாரமாக இருக்கின்றனர்''[34]

சீக்கியம் இதைச் சரிப்படுத்துகிறது. இந்தக் 'கண்ணி'யைச் சீக்கியம் வெறுக்கிறது. சீக்கியக் குருக்கள் துறவை அறவே வெறுத்

தனர். பெண்களைப் பாவிகளாகவும் தீயவர்களாகவும் நினைப்பதற்குப் பதில் ஆண்களுக்குச் சமமான அவர்களின் செயல்களை நினைவு கூர்கின்றனர். முனிவர்கள், தத்துவ ஞானிகள், அரசர்கள் அனைவரையும் கருப்பையில் வைத்துச் சுமந்தவர்கள் அவர்களே. அந்தக் கருப்பையை உடைய பெண்களை மதிக்கின்றனர். அவர்களைப் பாவப் பொருளாகக் கருதவில்லை.

இல்லறம் மோட்சமடைவதற்குத் தடையில்லை என்கிறது சீக்கியம். இதனை நிரூபிக்கக் குருக்கள் தாங்களே திருமணம் புரிந்தனர். தங்களுடைய ஆன்மீக வாழ்வில் தங்கள் மனைவிமார்களின் பங்கு என்ன என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இறைவனைத் தாங்கள் பிரார்த்தனை செய்யும் போது அவர்களின் உதவியையும் அவர்களின் உண்மையான பக்தியையும் புகழ்கின்றனர்.

முடிப்புரை

சீக்கியமதம் இந்து மதத்திலிருந்து வேறுபட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்து மதத்தைப் பற்றியும் முகம்மதிய மதத்தைப்பற்றியும் நன்கு அறிந்து கொண்ட குருநானக்கு அவைகளில் உள்ள நல்ல கருத்துக்களைமட்டும் எடுத்துக்கொண்டு, மேலும் சீர்திருத்தக் கருத்துக்களையும் சேர்த்துச் சீக்கிய மதத்தை உருவாக்கி இருப்பதை அறியமுடிகிறது. இம்மதம் இந்தியாவில் கடைசியாக ஏற்பட்டதாகையால் பிறவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது மிகவும் எளிமையானதும்கூட எனலாம். குருநானக்கின் கோட்பாடுகள் மிகச் சிறந்து விளங்கக் காரணம் அவருடைய கோட்பாடுகள் ஏழை மக்களுக்காக உருவாக்கப்பட்டவை என்று கூறமுடியும். சீக்கிய மதத்தையும் இந்து மதத்தையும் அவற்றின் கோட்பாடுகளையும் ஒப்பிடுவது என்பது மிகப்பரந்த ஆய்வாகவே இருக்க முடியும். முதல் முயற்சியாகச் சில வேறுபாடுகளையும், ஒப்புமைகளையும் இக் கட்டுரையில் கூறமுடிந்தது ஆனால் பரந்த அளவில் இவ்விரண்டு மதக் கோட்பாடுகளையும் ஆய்தல் சிறப்பாக இருக்கும்.

அடிக்குறிப்புக்கள்

1. Universal Sikhism, p 3.
2. குருநானக்கு தேவர், ப. 58.
3. 'கால்சா' – குரு கோபிந்த்சிங்கால் உருவாக்கப்பட்ட சகோதரத்துவத்தை வலியுறுத்தும் நிறுவனம்.

4. ரஹிராஸ், ராசுகவுறீபூர்பி, மஹலா,1.
5. ஜப்ஜி. 4... வரி 5,6.
6, ஜப்ஜி, 4... வரி 7,8.
7. ரஹிராஸ், ராசுகவுறீபூர்பி, மஹலா, 3.
8. ஜப்ஜி. 5... வரி 8,6.
9. Adhi Granth, Var Bihagara, AGP, 556,
10. Majumdar, R C. Pusalkat, A D. The Vedic Age, p. 385,
11. Bhahavad Gita, tr by Swamy Parbhavananda and Isherwood. p. 138,
12, Raga maru, Maholla, VP, 1001.
13. Raga Asa, Mahollo, I.P. 349.
14. Bhai Gurudas, I. Var pouri 23.
15. Varsuhi, slok 2 pouri. AGP 789.
16. 'ஜடகா'-ஆட்டை வெட்டும் பொழுது ஒரே வெட்டில் தலை வேறு முண்டம் வேறாக ஆக்குவதற்கு 'ஜடகா' என்று பெயர்.
17. ஜப்ஜி, 34... வரி 4-7.
18. கீர்த்தன் ஸொகில்லா, ராகுதனாஸ்ரீமஹைலா பாடல் 2.
19. மேலது, பாடல் 1.
20. Jogendra Singh & Daljit Singh, Sikh Religion.pp. 97-98,
21. கீர்த்தன் ஸொகில்லா, ராகு ஆசாஹல்லா பாடல் 1, ரஹாவு 1.
22. Universal Sikhism, p 99.
23. Universal Sikhism, p. 100,
24. Alanwaffs, Man, Woman and Nature, p. 117.

தமிழரால் முடியுமா?...

—டாக்டர் கதிர். மகாதேவன்

தமிழால் முடியுமா? என்ற வினா பல துறைகளிலும் பலராலும் கேட்கப்பட்டது. அறிவியல் துறைகளில் ஆங்கிலமே ஆட்சி செய்ய வேண்டும்; ஆங்கிலத்தின் மூலம் கல்வி பயின்றவர்தாம் உலக அரங்கு களில் மாட்சிமை பெறமுடியும் என்ற கருத்தும் உண்டு; தமிழால் முடியாது என்று கூறுவோரும் உண்டு. என்றாலும், தாய்மொழி வழிக் கல்வியைப் புறக்கணிக்க முடியாது என்பதை அறிவுடையோர் ஏற்றுக் கொள்வர்.

தமிழர் யார்? மொரீசியசில் தமிழர் என்றால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்று பொருளில்லை! தமிழறியாத தமிழர்தாம் அங்கு ஏராளம்! அங்கு வாழும் தமிழறிந்த கிறித்தவரை நான் தமிழர் என்று சுட்டியபோது அங்கு வாழ்வோர் சிலர் அதனை ஏற்கவில்லை. அத்தீவில் தமிழர் என்றால், முருகனை வழிபடுபவர்கள் என்ற கருத்து நிலவியதைக் கண்டேன். ஒரு வெள்ளையன் தமிழ் படித்த காரணத்தால், தமிழனாக முடியுமா? அல்லது ஒரு தமிழன் ஆங்கிலம் படித்த காரணத்தால், ஆங்கிலேயன் ஆக முடியுமா? என்பது அவர்கள் வாதம்...

தமிழ் நாட்டில் தமிழர் யார்? தமிழ் நாட்டில் வாழும் தமிழறிந்த அனைவரையும் சாதி, சமய, இன வேறுபாடின்றித் தமிழர் என்போம். தமிழறியாத பிறரையும் அன்போடும், பண்போடும், பாசத்தோடும் நேசத்தோம்டு அரவணைத்துத் தமிழ் தழீஇய சாயலவராய்க் கொள் வோம். தமிழ் நாட்டில் வாழவந்த அனைவரையும் தமிழராக ஏற்றுக் கொண்டதை வரலாறு கூறும். 'போப்' கல்லறையே இதற்குச் சான்று பகரும்.

பிரெஞ்சு நாட்டில் பிரெஞ்சு மொழி அறிந்தவர்களையே மதிப்பார்கள்! ஆனால், தமிழ் நாட்டில் எந்த மொழியில் பேசினாலும் யாரும் கவலைப்படுவதில்லை. ஏனென்றால், இந்தத் தமிழர்கள் சொந்த மொழியில் பேசுவதைத் தரக் குறைவாக நினைக்கிறவர்கள்.

தமிழ் மொழியில் புலமை உண்டென்றெண்ணுவதைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அரைகுறை அறிவை மதிப்பார்கள்!

எரிக் மில்லர் என்ற அமெரிக்கர் தமிழாய்வு செய்ய வந்த போது அவர் தமிழ்நாட்டில் கண்டறிந்த உண்மை மனங்கொளத் தக்கது. தமிழ் மக்களில் செம்பாதிக்கு மேல் படிப்பதே இல்லை! காரணம், அவர்களுக்குப் படிக்கவே தெரியாது. சுவரொட்டிகளில் உள்ள எழுத்-துக்களைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட, அவைகளில் உள்ள தலைவர்களின் படங்களைப் பார்த்து இனங் கண்டு கொள்கின்றனர். தமிழ் எழுத்தறிவு பெறுவதைவிட ஆங்கிலச் சொற்களை அவ்வப்போது மணிப்பிரவாளமாக இணைத்துப் பேசுவதில் தமிழர்கள் ஏற்றங்காணு கின்றனர்.

இதனாலன்றோ பாரதியார்,

''விதியே, விதியே! தமிழச் சாதியை
என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ?

என்று அமைந்து,

''விதியே! விதியே! தமிழச் சாதியை
என்செயக் கருதி இருக்கின்றாயடா?

என்று அல்லலுற்று, தமிழின் பழமையை எண்ணினால், அது அமரத்துவம் வாய்ந்தது என்று எண்ணினேன். நெஞ்சை அள்ளும் சிலம்பு, பொருளிலே தெளிவு, அறத்திலே உறுதி, இன்பத்திலே நெறி எனும் திருக்குறள், ஞாலத்தின் ஞான எல்லை இற்றெனக் காட்டிய கம்பராமாயணம் எனத் தமிழுக்கு வாய்த்த இன்னபிற நூல்கள் தமிழின் அமரத்துவத்தைப் பறைசாற்றின.

தமிழ் சிறந்தது! ஆனால், தமிழினமோ அவலத்தின் சுழியிலே சிக்கிச் சீரழிந்து ஆப்பிரிக்காவிலும் கீழை நாட்டுத் தீவுகளிலும் பசியாலும் பிணியாலும் கொடுமையாலும் நலிவுற்று மாள்கிறசெய்தி கேட்டு மனம் துணுக்குற்றது. ஆயின், என்னுளம் கலங்கவில்லை! ஏன் தெரியுமா? .. தமிழச் சாதியினர் தெய்வம் மறவார்; செய்யும் தொழிலில் தவறிழையார். என்செயல் செய்தலும் எவ்வருத்தம் வந்தாலும் இறுதியில் பெருமையும் இன்பமும் எய்துவர் என்ற அறம்பொருள் என்னுள் வேராக ஆழமாகப் பதிந்திருந்தது. எனவே நான் கலங்கவில்லை! என்கிறார் பாரதி. யார்

இத்துணைக் கேடுகள் தமிழச் சாதிக்கு நேர்ந்தாலும் கலங்கா திருந்த பாரதிக்கு ஒரு செய்தி கதி கலங்க வைத்தது...

அது யாது?...

தமிழரிடையே காணும் இருவகைக் கேடுகள்! வள்ளுவர் இவ்விரு வகைக் கேடுகளை விளக்கும் போது,

(இ) ஒருவன் செய்யத் தகாத செயல்களைச்
செய்வதனால் கெடுவான்

(உ) செயத் தக்க செயல்களைச் செய்யாமல்
விடுவதனால் கெடுவான்

என்பதனை,

''செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்''

என்பர். பாரதியார் தமிழரிடையே காணும் இருவகைக் கேடுகளை விளக்கும்போது—

தமிழருள் ஒரு சாரார்,

மேற்றிசை வாழும் வெள்ளையர்தம் நடை, உடை, உணவு, வாழ்வியல், கொள்கை, சமயம் எனும் இவை நம்முடைய வற்றினுஞ் சிறந்தவை. எனவே, அவைகளை அப்படியே தழுவிக் கொண்டால் வாழலாம்; இன்றெனில், தமிழ்ச் சாதி தரணி மீதிராது, அழிந்தொழியும் என்பர்.

பிறிதொரு சாரார்,

ஏ, ஏ! அஃது உமக்கு இசையாது! நம் முன்னோர்கள் காட்டிய ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும் பண்பாட்டு மரபுகளும் நம்மைக் காக்கும். ஆனால், இப்போது கலியுகம் நடப்பதால் விதி நம்மை ஆட்டுகிறது, விதியின் பெரியது யாது? என்பர்.

இந்நிலையில் இங்குள்ள தமிழச்சாதி, இருதலைக் கொள்ளி (மூங்கில் குழல்) இடையே அகப்பட்ட எறும்பு போல் தவிக்கின்றனரே என்று தம் விழிகளை உருட்டி,

.... தமிழச் சாதியை
என்செயக் கருதி இருக்கின்றா யடா?

என்று கேட்கிறார்.

இந்தக் கவிதையில் தமிழர் நிலைக்குத் தீர்வு கூறுவது போல ஒரு சில வரிகள் உள்ளன. இக்கவிதையின் இறுதி வரிகள் காணப்பட வில்லை! என்றாலும் பாரதியார் முன்னுக்குப் பின் முரண் கூறு பவரில்லை! இவர்தம் கருத்தைப் பிற பாடல்களால் தெள்ளத் தெளிவாக அறியலாம்.

தீர்வு ...

நன்மையும் அறிவும் எந்தத் திசையிலிருந்து வந்தாலும், யார் அவைகளுக்கு வழிகாட்டினாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்பதே அவர்தம் கருத்தாகும். இதனை,

... நன்மையும் அறிவும்
எத்திசைத் (து) எனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீ ராயின்
அச்சம் ஒன்று இல்லை!''

என்று பாரதியார் அதே கவிதையில் தீர்வு காண்பர்.

தமிழ்மொழியைப் பற்றிப் பாரதியார் மிகத் தெளிவான கருத்தை உறுதியாகக் கொண்டிருந்தார்.

தமிழை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்றார் பாரதி மெல்லத் தமிழினிச் சாகும் என்று சாபம் இட்டோ ணைப் பேதை என்று அழைத்தார்.

மேலும் பாரதியார். ஆங்கிலக் கல்வியை ஆனமட்டும் சாடினார். தம் தந்தை ஆங்கிலக் கல்விவழிப் பயிலுமாறு அனுப்பியதை எள்ளி நகையாடினார்! ஆங்கில மொழி வழிக் கல்வியைத் தமிழன் படிப்பது, சிங்கக் குருளையைப் புல்லைத் தின்னப் பணித்தது போலவும், பார்ப்பனப் பிள்ளையைக் கசாப்புக் கடை வைக்கச் சொன்னது போலவும் ஆயிற்று என்கிறார்.

ஆங்கிலக் கல்வி வழிக் கற்பதைப் பேடிக் கல்வி என்றார். அதிலே படித்து உழல்பவர்களைப் பித்தர் என்றார். ஆங்கில மொழி வழிக் கல்வியால் தீங்கு பல தனக்கு நேர்ந்தது என்கிறார். இத்தகைய கல்வியால் நலம் ஓர் எள்ளளவுகூட இல்லை என்பதை நாற்பதாயிரம் கோயிலில் சத்தியம் செய்வேன் என்கிறார்.

மகாகவி பாரதியார் கூறிய கருத்துக்களை இன்று மதிப்பதாகக் கூறுகிறார்கள்!

ஆங்கிலக் கல்வி மோகம் மழலைப் பள்ளிகளில்
போலி மதிப்பைப் பெற்று வளர்பருவம் வீணாகிறது!

உயர் நிலைகளில் ஆங்கிலம் இன்னும் உயிர் நிலைகளைப் பிடித்துக் கொண்டு ஆட்டுறது!

மொழி வாழ, வளர அரசியல் செல்வாக்கு ஒன்றால்தான் முடியும் என்று ஆடோ யெஸ்பர்சன் என்ற மொழியியல் அறிஞன் கூறுவான்.

தமிழர்களால் தமிழுக்காக ஆளும் தமிழ்நாட்டில் தமிழ் எல்லா நிலைகளிலும் ஏற்றம் பெற நாளும் வழி வகை செய்ய வேண்டும். தமிழர்களுக்கு ஏற்பட்ட (தலை) விதியை மாற்ற, விதிகளால் தாம் முடியும். இன்று அரசுத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள் நல்ல தமிழறிவு படைத்தவராக உள்ளனர். அவர்தம் கருத்துக்களைச் சான்றோர் துணையுடன் நடைமுறைப் படுத்த விரைந்து செயல்பட வேண்டும்.

தமிழரென நாமங் கொண்டோரால் இது முடியுமா?

அகராதிகளில் பொருள் விளக்கச் சான்றுகள்

டாக்டர் ஏ. ஆதித்தன்

அகராதிகளில் அகராதிச்சொல்லுக்குக் கொடுக்கப் பெறும் செய்திகளில் சொற்பொருள் விளக்கம் பெறுவதற்குத் தரப்பெறும் பொருள் விளக்கச் சான்றும் ஒன்றாகும். இப்பொருள் விளக்கச் சான்றுகள் தமிழ் - ஆங்கில இருமொழி அகராதிகளில் இடம்பெற வேண்டிய முறையினை விவரிப்பதே இக்கட்டுரை.

பொருள் விளக்கச் சான்றுகள் அகராதிச் சொல்லின் சூழலுக்கேற்ற பொருளைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிகின்றன. மேலும் அகராதிச்சொல்லின்வருகை வழக்கினைத் (Collocation) தெரிந்து கொள்ளவும், அகராதிச் சொல்லின் சொல்வகையினையும் (part of speech) இலக்கணப் பண்புகளையும் அறிந்து கொள்ளவும், அகராதிச் சொல்லின் நடையியல் சிறப்பு வழக்கினைக் கண்டறியவும் பொருள் விளக்கச் சான்றுகள் பயன்படுகின்றன.

சில சொற்கள் மொழியில் சில சொற்களோடு மட்டுமே இணைந்து வரும். இப்பாங்கினைப் பொருள் விளக்கச் சான்றுகள் புலப்படுத்தும். சான்றாகத் 'தாய்ச்சி' என்னும் சொல் 'பிள்ளை' என்பதனோடு இணைந்து 'பிள்ளைத்தாய்ச்சி' என ஒரே ஒரு சூழலில் மட்டும் வருவதனைப் பொருள் விளக்கச் சான்றின் வழி அறிந்து கொள்வதனைச் சுட்டலாம்.

ஒரு அகராதிச் சொல் வினையாகவும், பெயராகவும் செயல்படும் நிலையில் பொருள் விளக்கச் சான்றுகள் இப்பான்மையினை நன்கு தெளிவு படுத்தும். இன்னமும் பொருள் விளக்கச் சான்றுகள் அகராதிச் சொல்லின் தொடரியல் பண்புகளைக் கண்டறியவும் துணைபுரிகின்றன. மேலும் இவை அகராதிச் சொல்லின் இலக்கணப்பயன்பாட்டினையும் தெரிந்துகொள்ள உதவுகின்றன.

'விடு' என்னும் வினை முதல்வினையாகவும், துணை வினையாகவும் செயல்படுவதுண்டு. இதனைக் 'கண்ணன் பட்டம் விட்டான்', 'கண்ணன் வந்துவிட்டான்' எனும் பொருள்விளக்கச் சான்றுகளின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

பொருள்விளக்கச் சான்றுகள் பலபொருள் ஒருசொல்லின் வெவ்வேறு பொருள்களின் நுண்ணிய வேறுபாடுகளைக் கண்டறியத் துணைபுரிகின்றன. பலபொருள் ஒருசொல் தொடர்புடைப் பலபொருள் ஒருசொல் தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல் என இருவகைப் படும். இவற்றுள் தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்லின் அடிப்படைப் பொருளுக்கும், அடிப்படைப் பொருளிலிருந்து வருவிக்கப்பெற்றதுணை நிலைப்பொருள்களுக்கும் இடையயே காணப்பெறும் வேறுபாடுகளை பொருள் விளக்கச் சான்றுகள் நன்கு புலப்படுத்துகின்றன.

சான்றாகத் 'தந்தை' என்னும் அகராதிச் சொல்லின் அடிப்படைப் பொருளாக 'அப்பா' என்பதும் துணை நிலைப் பொருள்களாக 'கடவுள்' 'தலைவர்', 'சமய குரு' என்பனவும் அமைந்துள்ளமையினை பொருள் விளக்கச் சான்றுகள் வேறுபடுத்திக் காட்டுவதனைக் கூறலாம்.

பொருள் விளக்கச் சான்றுகள் அகராதி ஆக்குகின்றவருக்கு நம்பிக்கைகள், மரபுகள், நாட்டுப்புறக்கூறுகள், பொருளாதார-விவசாய நடைமுறைகள் போன்ற பண்பாட்டுச் செய்திகளைப் புலப்படுத்துவதற்குப் பெரிதும் உதவிபுரிகின்றன.

அகராதியில் எத்தகைய சொற்களுக்குப் பொருள்விளக்கச் சான்றுகள் கொக்கப்பட வேண்டும் என்பதும், எத்தகைய சான்றாதாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் அகராதிவகையினைப் பொறுத்தே அமையும். பொருள் விளக்கச் சான்றுகள் சிறப்பு அகராதிகளிலும் கையடக்க அகராதிகளிலும் இடம்பெறுவதில்லை. பொது அகராதிகளிலும் வரலாற்று அகராதிகளிலும் பொருள்விளக்கச் சான்றுகள் கட்டாயமாக இடம்பெறும். பொது அகராதிகளிலும் வரலாற்று அகராதிகளிலும் அகராதிச் சொல்லின் அனைத்துப் பொருள்வேறுபாட்டுச் சூழலைச் சுட்டப் பொருள்விளக்கச சான்றுகள் இடம்பெறுகின்றன.

அகராதியில் காணப்பெறும் அனைத்துச் சொற்களுக்கும் பொருள்விளக்கச் சான்றுகள் கொடுப்பதில்லை. அனைத்து அகராதிகளிலும் கலைச்சொற்களுக்குப் பொருள் விளக்கச் சான்றுகள் தரப்பெறுவதில்லை. பண்பாட்டுக் கூறுகளைச் சுட்டும் சொற்களுக்கும், மரபுத்தொடர், பழமொழி போன்ற நீண்ட அகராதிச் சொற்களுக்கும் பொருள்விளக்கச் சான்றுகள் கொடுக்கப்பெறல் வேண்டும்.

தமிழ் அகராதிகளில் குறிப்பாகத் தமிழ்ப் பேரகராதியில் பழமொழி தவிர்ந்த அகராதிச் சொற்களுக்குப் பொருள்விளக்கச் சான்றுகள் தரப்பட்டுள்ளன. பெரும்பான்மையான தமிழ்–ஆங்கில அகராதிகளில் பொருள்விளக்கச் சான்றுகள் கொடுக்கப் பெறவில்லை. தமிழ்ப் பேரகராதியில் மட்டுமே பொருள்விளக்கச் சான்றுகள் தேவைக் கேற்பக் கொடுக்கப்பெற்றுள்ளன.

பொருள்விளக்கச் சான்றுகள் பண்பாட்டு அடிப்படையிலும் இலக்கண அடிப்படையிலும் சரியானதாகவும் முறையானதாகவும் அமைதல் வேண்டும். பொதுவாகப் பொருள்விளக்கச் சான்றுகள் மூன்று வகையினவாக அமையப்பெறும். முதல்வகைப் பொருள் விளக்கச் சான்றுகள் வெளிவந்த இலக்கியங்களின் மேற்கோள்களாக அமையப்பெறும். இத்தகைய மேற்கோள்களை வருகைக் குறிப்புடன் கொடுப்பது மரபாகும். இத்தகைய சான்றுகள் அகராதிச்சொல்லின் அடிப்படைப் பொருளைத் தெரிந்துகொள்ள மிகவும் துணைபுரி கின்றன.

இரண்டாவது வகை பொருள் விளக்கச் சான்றுகள் உரையாடல் கள் அன்றி வாய்மொழி இலக்கியங்களிலிருந்து எடுத்தாளப்பெறும். மூன்றாவது வகை பொருள் விளக்கச் சான்றுகள் அகராதிக்கலைஞரால் உருவாக்கப்பெற்றதாக இருக்கும். மூன்றாவது வகைச் சான்றுகள் அகராதிக் கலைஞரின் சமகாலப் பொருள்களைத் தெரிந்துகொள்ள உதவி புரிகின்றன.

ஈண்டுக் குறிப்பிடப் பெற்ற மூன்று வகையான பொருள் விளக்கச் சான்றுகளும் தமிழ்ப் பேரகராதியில் மட்டுமே சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

பொதுவாகப் பொருள் விளக்கச் சான்றுகள் நீளமானவைகளாக அமைதல் கூடாது. அதே நிலையில் குறைத் தொடர்களாகவும் இவை அமைந்துவிடக் கூடாது. இவை எந்நிலையிலும் இலக்கண முடையவைகளாக இருத்தல் வேண்டும். மேலும் இவை சூழலுக்குரிய பொருளை விளக்கும் வகையில் பொருண்மை நிலையில் முற்றுப்பெற்ற வைகளாக அமைய வேண்டும்.

பொருள் விளக்கச் சான்றுகள் பண்பாட்டுக்கு ஏற்புடையனவாக அமைந்து தம்முள் ஒன்றோ இரண்டோ அகராதிச் சொல்லின் பொரு ளை விளக்கும் சொற்களைக் கொண்டு விளங்க வேண்டும். மேலும் இவை முரண்பட்ட பொருளைத் தரும் வகையிலோ அன்றித் தொடர்பிலாக் குறிப்புக்களைத் தரும் வகையிலோ அமைந்து விடக்கூடாது.

நாம மந்திரம்

டாக்டர் அ.மா. பரிமணம்

முழுமுதற் பரம்பொருளை ஏற்றுக் கொண்ட சமயங்களெல்லாம், மாந்தரனைவரும், மானுடப் பிறப்பின் சிறப்புணர்ந்து, செந்நெறி நின்று, உலப்பிலா ஆனந்தமாய பேரின்ப நிலையினை எய்த வேண்டும் என்பதனைத் தம் குறிக்கோளாகக் கொண்டு திகழ்கின்றன. அதற்காக அவை காட்டும் நெறிகளுள், கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒருங்கே களிப்பூட்டுவதாகவும், வல்லார்க்கும் மாட்டார்க்கும் ஒருங்கே வளந்தருவதாகவும் அமையும் ''பக்தி நெறி'' எளிமையும் இனிமையும் மிக்க செந்நெறியாகும். ஞானத்தால் தொழ நினைக்கும் ஞானியர்க்கும் அஃது ஓர் அருமந்த நெறியாகும்.

பக்தி நெறியின் பல்வேறு நிலைகளின் அடிப்படையாக அமைவது, தாமுணர்ந்த பரம்பொருளின் திருப்பெயரை உள்ளத்தால் நினைத்தலும் உரையால் போற்றுவதும், உடலால் செயற்பட்டுப் பேணுவதும் ஆகும். இவ்வாறு மனம், வாக்குக் காயத்தால்-உள்ளம் உரை உடலால்-நினைத்துப் பேசிச் செயற் படுவதனைச் சமயங்கள் 'முக்காண வழிபாடு' என்றுகூறுகின்றன. "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை, சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே-வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே'' என்று அப்பரடிகள் குறிப்பிடுகின்றார். மேலுமவர், 'திரு அங்கமாலை'என்னும் தம் தேவாரப் புதுப்படைப்பில், நெஞ்சம்உட்பட்ட ஒவ்வொருஉறுப்புக் களையும் தனித்தனியே விளித்து, இறைவனைப் போற்றி வழிபடுமாறு ஏவியுள்ளார். பக்தி நெறியிலமைந்த முக்காண வழிபாட்டு மாண்பினை உணர்ந்த, தெய்வத்தை உடன்படாத புத்த சமண சமயங்கள் போன்றனவும், தம் சமய ஆதிமூர்த்திகளை இவ்வகையில் வழிபாடு மாறு வகுத்துள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

மந்திரம் என்னும் சொல் பல பொருள் கொண்டதாகும். தாம் ஏற்றுக்கொண்ட சமய முழு முதற்பொருளின்பெயர்களைத் தொடர்ந்து கூறிப் போற்றுவதும் மந்திரம் ஓதுதல் எனப்படும். பரம்பொருளின் பெயர்களாக அமைவதனால் ஒவ்வொரு சமயத்தார்க்கும் அவர்தம்

சமய தெய்வப் பெயர்கள் மந்திரங்களாகும், அவை இறை பெயர்களாக அமைவதால் 'நாமமந்திரம்' என்று கூறப்பெறும். வேதங்களை உடன் பட்ட அறு சமயங்களில் இன்று நடைமுறையில் சிறந்து விளங்கும் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம் ஆகியவற்றிற்கு முறையே 'நமசிவாய' 'ஓம் நமோ நாராயணா' 'ஓம் சக்தி' 'ஓம் சரவண பவ' என்பன நாம மந்திரங்களாக உள்ளன. மந்திரப் பெயரில் அமைந்-துள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை அடிப்படையில் சிவ மந்திரம் ஐந்தெழுத்து மந்திரம் என்றும், திருமால் மந்திரம் எட்டெழுத்து மந்திரம் என்றும், முருக மந்திரம் ஆறெழுத்து மந்திரம் என்றும் குறிப்பு மொழியாகக் கூறிப் போற்றப்படுகின்றன.

மக்கள் என்பதற்குச் சிறப்படையாளமாகத் திகழும் மனம் என்பது எப்போதும் சலனப்படும் இயல்பினது; ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றும் இயல்பினது. அத்தகு மனத்தைக் கட்டுப் படுத்துவது—அடக்குவது—ஒரு நெறிப் படுத்துவதென்பது தூய சமய வாழ்விற்கு இன்றியமையாததாகும். யானைப்பாகன் தன் யானையை நடத்திச் செல்லுங்கால், அதன் கை தரையைத் துழாவிச் செல்வதனைத் தடுத்து நிறுத்தும் வகையில், அதன் கையில் ஒருசிறு கம்பினையோ இருப்புச் சங்கிலியையோ கொடுப்பன். அவ்வகையில், பல வகைகளில் தடுமாறும் மனத்தினை ஒரு நெறிப்படுத்த அதற்கோர் பற்றுக் கோட்டினை அளிப்பது நல்லது. அப்பற்றுக் கோடு இறைவன் திருப்பெயராக—நாம மந்திரமாக—அமைவது சாலச் சிறந்தது. 'ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞான சம்பந்தன்' என்னுமிடத்தே, ஞான சம்பந்தர் தம் மனத்தகத்தே இறைவனை வைத்தமையினையும், அதனால் அது, ஒரு நெறிப்பட்டு உணர்ந்து செல்லும் தன்மை அடைந்தமையினையும் அறியலாம்.

தமிழகத்தில் பக்திப் பேராறுகள் பெருக்கெடுத்து ஓடுமாறு செய்த ஆழ்வார்களும் நாயன்மார்களும், இறையடியார்களும் அன்பர்களும் தம் உள்ளத்தில் நிறுத்திப் பயன் கொள்ளுதற்காம் நாம மந்திரங்களைத் தங்கள் பாசுரங்களில் பலவாறாகப் பகர்ந்துள்ளார்கள். அவர்களுக்கு முன்னரே, தமிழக மக்கள் தாம் போற்றிய தெய்வங்களின் திருப்பெயர்களை—நாம மந்திரங்களை—நெஞ்சார நினைந்து நாவாரப் போற்றி வந்த பாங்கினை, சமணம் சார்ந்தவர் என்று கருதப்பெறும் இளங்கோவடிகள் தம் காப்பியத்தில், 'திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே', 'நாராயணா வென்னா

நாவென்ன நாவே' என அமைந்த சிந்தைக்கினிய, செவிக்கினிய தொடர்களால் புலப்படுத்தியுள்ளார்.

நம்மாழ்வார், 'பன்னிரு நாமப்பாட்டு' எனப்பெறும் தம் பதிகம் ஒன்றில், கேசவன், நாரணன், மாதவன், கோவிந்தன், விட்டு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமெனன், சிரீதரன், இருடிகேசன், பற்பநாபன், தாமோதரன் என்னும் பன்னிரு பெயர்களையும்-துவாதச நாமங்களையும், தனித்தனி இனித்திடும் கனியாகப் போற்றியுள்ளார். வழக்கத்திற்கு மாறாக அப்பதிகம் 13 பாசுரங்கள் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மெய்ந்நின்ற ஞானத்தால், பெரிய திருமந்திரம் என்பது 'நாராயணா' என்னும் நாமமே என்பதனைக் கண்டுணர்ந்த திருமங்கையாழ்வார் 'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண் டேன். நாராயணா என்னும் நாமம் என்று காட்டியதோடு, 'உடம் பெலாம் கண்ண நீர் சோர நள்ளிருள் அளவும் பகலும் நான் அழைப்பன், நாராயணா என்னும் நாமம்' என்று மேற்கொண்ட தம் செயலையும் விளக்கியுள்ளார், நாராயணா என்னும் பெருநாம மந்திரம் ஓதவல்லார்க்குக் குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார் படும் துயர் ஆயினவெல்லாம் நிலந்தாம் செய்யும்; நீள்விசும்பு அருளும்; அருளொடு பெருநிலம் அளிக்கும்; வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற தாயினும் ஆயின செய்யும்' என்று அதன் பலனையும் குறிப்பிட்டுள் ளார், அதனால், ''துஞ்சும்போது அழைமின்; துயர்வரின் நினைமின்; துயர்இலீர் சொல்லிலும் நன்றாம் என்று நமக்கு அறிவுறுத்துகின்றார்.

ஞான சம்பந்தர் திரு ஐந்தெழுத்து மந்திரத்தைத் 'துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்திலும், நெஞ்சகம் நைந்து நினைமின் நாள் தொறும்' என்று கூறுகின்றார், திருநாவுக்கரசர், தம்மைப் புறச்சமயத் தார் கற்றுணைக் கடலிற் பாய்ச்சிய போது நற்றுணையாக அமைந்தது 'நமச்சிவாய' என்னும் நாமமந்திரமே என்று கூறுகின்றார். சலம் பூ வொடு தீபம் மறந்தறியேன் என்று கூறிய அவர், 'நலந்தீங்கிலும் உன்னைமறந்தறியேன்' உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்' என்று விளக்கியுள்ளார். 'நாவினுக் கருங் கலம் நமச்சிவாயவே' என்பது அவர் கண்டு காட்டிய முடிபு. 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்பர் சுந்தரர், தமது சிவபுராணத்தை 'நமச்சிவாய வாழ்க' எனத்தொடங்கிய மணிவாசகர், 'போற்றி ஓம் நமச்சிவாய செய செய போற்றி' என்று பிரணவ பஞ்சாட்சர மந்திரங் கூறி இறை வனைப் போற்றுகின்றார். 'மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங் கள்' என அருணகிரியும், 'நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும் நமச்சிவா

யத்தை நான்மறவேனே' என வடலூர் வள்ளலாரும் நாமமந்திர நலப் பாட்டினை எடுத்தோதுவர், 'பஞ்சமந்திரம்' என்னும்பெயரில் சமணரும், 'புத்தம் சரணம் கச்யாமி' எனப் பௌத்தரும் கூட நாம மந்திர மகிமை யுணர்ந்து அதனைத் தம் சமயக் கோட்பாட்டிற் கேற்பப் போற்றுவர்.

அன்பர்கள் தனித்தனியே தாமுகந்த இறைவன் திருநாமத்தினை ஓதிப் போற்றுவதோடு அடியார் பலர் கூடிப் பாடிப் பரவும் முறையும் சமய உலகில் போற்றப்படுகின்றது. திருமுறை, திவ்வியபிரபந்தப் பாசுரங்கள் ஆகியன குழுவாகப் பாடிப் பரவுதற்கு ஏற்றனவாக அமைந் திருந்த போதிலும், இக்காலத்தில் அம்முறை பெருமளவில் நடைமுறை யில் இல்லை என்றே கூற வேண்டும். பாரதத்தின் வடபகுதியில் கொட்டாட்டுப் பாடலாய், கோட்டி கானமாய்ப் பசனைப்பாடல் (Bhaj-an Songs) என்னும் முறையில் இந்த நாம மந்திர வழிபாடு பெருமள வில் இன்னும் விளங்கக் காணலாம். பாகவதர்கள் ஒருங்கு கூடி இசைக்கருவிகளுடன் நாம சங்கர்த்தனம் பண்ணும் காட்சி நெஞ்சைக் கனிவிப்பதாக அமையும்.

நாம மந்திரம் ஓதுவதனைப் பக்தி நெறியின் அடிப்படையாக—பால பாடமாகக்—கொள்ளுதல் ஏற்புடையதாகும். ஒவ்வொருவரும் தாமுகந்த இறைவனின் திருநாமங் கூறுவதனைப் பயிற்சியால், அனிச்சைச் செயலாக ஆக்கிக் கொள்ளவேண்டும். 'நான் மறக்கினும் சொல்லும் நா' என்று கூறுமளவு அப்பயிற்சியில் நெஞ்சார்ந்த உறைப்பு உண்டாகவேண்டும்.

உலகியல் வாழ்வில் ஈடுபட்டு நாடு மொழிகளின் நலத்தில் நாட்டங்கொண்டு உழைத்து வரும் ஓரன்பர் உண்ணும் போதும், பேருந்திற் செல்லும் போதும், அன்பரொடு உரையாடும் போதும் 'நாராயணா' என்னும் நாமத்தை ஓதிவருவார். (அன்பர் பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி அவர்கள்) மேலோடியாகக் காண்பவர்கள் அவர் கூறுவதனை வேடிக்கையாக உரைக்கின்றார் என்று கருதக் கூடும். அவரொடு பழகி அவர் அவ்வாறு கூறும் பாங்கினை நோக்குவ ராயின், அது அவரது, ஆழ்ந்த இறையுணர்வின் உறுதியான வெளிப் பாடு என்பது புலனாகும். அதனால், அன்றாட வாழ்வில் எதிர்வரும் சிக்கல்களைக் கலக்கமின்றிச் சந்திக்கவும், விரைவில் எளியதாகவும் இனியதாகவும் முடிவுக் காணவும் அவரால் முடிகிறது. இவ்வாறே வாழ்வின் அனைத்து நிலைகளிலும் வாழ்வோர் யாவரும் உள்ளத்தில் ஆழமான இறைப்பற்றுக் கொள்ளவும் அதன் உறைப்பால் இறைவன்

அஃதன் உறைப்பால் இறைவன் திருநாமத்தை எந்நிலையிலும் உரைக்கவும் வல்ல தன்மையை வளர்த்துக் கொள்வாராயின், 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்னும் நிலையினை எய்தல் கூடும்.

ஒரு சமயம் உணர்த்தும் பரம் பொருளுக்கு அச்சமயத்தவர் பல பெயர்களைக் குறிப்பிட்டுப் போற்றவும் செய்வர். 'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்' என்று அடியார்கள் வழிபாடு செய்வதனைக் காணலாம். ஆ வேறு நிறங்களுடையனவாக இருந்தாலும் அவ்வாக்கள் பயந்த பால் வேறு நிறமாகாமல் ஒரே நிறமாய்த் திகழ்வதனைப் போலத் திருநாமங்கள் பலவாயினும் அவற்றால் உணர்த்தப் படும் பரம்பொருள் ஒன்றே என்று உணர்ந்து, யாதானுமோர் பெயரை மந்திரமாகப் போற்றி வழிபடுவது சிறந்ததாகும்.

'ராம' என்று சொல்ல வராத ஒரு வேடனை 'மரா' என்று தொடர்ந்து சொல்லச் செய்தும் அதனால் அவன் உள்ளத்தில் 'ராம' மந்திர ஒலி தோன்றச் செய்தும் அதனால் அவன் இறையுணர்வு மிக்கோனாய் விளங்கச்செய்தும் ஆற்றிய சாதனையைச் சமய வரலாற்றில் காண முடிகிறது. இறை 'நாம மந்திர' உபாசனை, ஆன்ம சாதனை மேற்கொள்ளவோர்க்கு அடிப்படையாக அமைய வேண்டிய முதற்படியாகும். எவருடைய உள்ளம் இறை நாமத்தால் நிறைவுற்றுள்ளதோ, எவருடையவாய் இறை நாமத்தை இயன்றபோதெல்லாம் இயம்பிப் பொலிகின்றதோ, எவருடைய கரணங்களெல்லாம் இறையுணர்வு அடிப்படையில் இயங்குகின்றனவோ அவர், வையத்துள் வாழ்வாரேயாயினும் வானுறையும் தெய்வத்துள் வைத்துப் போற்றப் பெறும் தகுதி சான்றவராவர் என்பது திண்ணம்.

சுவடிகளில் காலக்குறிப்புக்கள்

—மோ.கோ. கோவைமணி

சுவடிகளில் இடம்பெற்றிருக்கும் நூல்கள், அவை எழுதபட்ட காலம் முதலியன சுவடியின் தொடக்க ஏட்டிலோ இறுதி ஏட்டிலோ சுவடி எழுதுபவர்களால் குறிப்பிடுவது வழக்கம். மேலும் தொடக்க ஏட்டில் எழுதத் தொடங்கிய காலத்தையும், இறுதி ஏட்டில் எழுதி முடிக்கப்பெற்ற காலத்தையும் குறிப்பிடுவதுண்டு. சுவடி விளக்க அட்டவணை தயாரிக்க முற்படும்போது சுவடியின் தொடக்க ஏட்டில் கொடுக்கப்பட்டிருப்பதை முற்குறிப்பு என்றும், இறுதி ஏட்டில் கொடுக் கப்பட்டிருப்பதைப் பிற்குறிப்பென்றும் குறிப்பர். முற்குறிப்புகளும் பிற் குறிப்புகளும நூலின் பெயர், நூலாசிரியர் பெயர், ஏட்டில் எழுதியவர் பெயர், முகவரி, காலம் போன்ற சிறப்புச் செய்திகளைக் குறிப்பன வாம். இக் குறிப்புக்களில் உள்ள காலக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு ஒரு சுவடி எந்தக் காலத்தில் எழுதத் தொடங்கியது என்றும், எந்தக் காலத்தில் எழுதி முடிக்கப்பெற்றது என்றும் அறியமுடியும். காட்டாக,

''சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் 13ஆம் தேதி வியாழக் கிழமை மக நட்சத்திரம் (25-5-1882)'' எனத் தொடக்க ஏட்டிலும், ''சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 20ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை உத்திராட நட்சத்திரம் கூடிய அமிர்த யோகத்தில் எழுதி நிறை வேறியது (2-7-1882)'' என இறுதி ஏட்டிலும் குறிப்பிடப் பெற்றுள்ளது (திருமண பவனி, சு. எண். 716). மேலும் நூலுக்குள் உள்ள படலங்கள், சருக்கங்கள், தொகுதிகள் ஆகியவையும் எழுதி முடிக்கப்பெற்ற நாளும் கிழமையும் சில சுவடிகளில் குறிப்பிடப் பெற்றுள்ளன. (சூடாமணி நிகண்டு, சு.எண்.1584:த) சுவடியின் ஒவ்வொரு தொகுதியின் முடிவிலும் எழுதி நிறைவேறிய நாளும் கிழமையும் குறிப்பிட்டுள்ளமை புலனாகும்.

ஒரே சுவடிக்குள் பல நூல்கள் இருந்தாலும் சுவடியின் தொடக்க ஏட்டிலும் இறுதி ஏட்டிலும் மட்டும் காலம் குறிக்கப்பெற்றிருக்கும்;

அல்லது முதல் நூலின் இறுதி ஏட்டிலோ இறுதி நூலின் இறுதி ஏட்டிலோ காலம் குறிக்கப்பெற்றிருக்கும் இதனால், சுவடியின் முதல் நூலின் காலமும், இறுதி நூலின் காலமும் தெளிவாக அறியலாம். மேலும் இச்சுவடியிலுள்ள-இடைப்பட்ட நூல்களுக்கும் இக்காலப்பகுதி பொருந்தும். காட்டாக,

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறைச் சுவடி எண். 192இல் ஆறு நூல்கள் இடம்பெற்றுள்ளன. இச்சுவடியின் முதல் நூலான 'தத்துவ நிருபணம்' என்னும் தத்துவ நூலின் பிற்குறிப்பாக ''சவுமிய வருஷம் துலா (ஐப்பசி) மாதம் 20-ஆம் தேதி (3-11-1849)'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்து நான்குநூல்களான 'சரநூல்' (192-2); 'வீரசைவப் பிரமாணத்திரட்டு' (192-3); 'தாரக யோகம்' (192-4); 'திருமுகப் பாசுரம் (192-5)' ஆகிய நூல்களுக்குக் காலக்குறிப்பு இல்லை. இதற்கு அடுத்த நூலான 'பஞ்சீகரண பாவம்' (192–6) என்னும் நூலின் இறுதி ஏட்டில் ''சவுமிய வருஷம் கார்த்திகை மாதம் 17-ஆம் தேதி சுக்கிர வாரநாள் (வெள்ளிக்கிழமை) ரோகிணி நட்சத்திரம் தனுசு லக்கினத்தில் எழுதி நிறைவேறினது (30–11–1849)'' என்றிருப்பதையும் காணலாம். இச்சுவடியின் ஏட்டெண் தொடர்ச்சியாகவும், கையெழுத்து ஒரு சீராகவும் இருப்பதால் இச்சுவடிக்குள் உள்ள மற்ற நான்கு நூல்களும் ஒருவரே ஒருகாலத்தில் எழுதியனவாக இருக்க வேண்டும். அப்படியாயின், சு எண், 192-2 முதல் 192-5 வரையுள்ள நூல்களும் 3-11-1849 - 30-11-1849-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பெற்றது என்று துணியலாம்.

மேலும், பல நூல் கொண்ட ஒரு சுவடியில் ஒவ்வொரு நூலின் இறுதி ஏட்டிலும் காலக்குறிப்பு இடம் பெற்றுள்ளமையைக் காண முடிகிறது. இதனால் ஒவ்வொரு நூலின் காலத்தையும் கணிக்க முடிகிறது. காட்டாக, தஞ்சாவூர் மகாராசா சரபோசியின் சரசுவதி மகால் சுவடி நூலகத்தில் உள்ள சுவடியில் (சுவடி எண். 698) 15 நூல்கள் இடம்பெற்றுள்ளன. இச்சுவடியில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொரு நூலின் இறுதியிலும் அந்நூல் எழுதப்பெற்ற காலம் குறிக்கப்பெற்றுள்ளது.

முற்குறிப்பும் பிற்குறிப்பும்

ஒரே சுவடிக்குள் முற்குறிப்பும் பிற்குறிப்பும் இடம்பெறுதல் உண்டு. இவ்விரண்டு குறிப்புகளும் காலத்தை உறுதி செய்யும்

வண்ணம் அதற்குத் தகுநத குறிப்புக்களைத் தருவதுண்டு, காட்டாக' ''பிரசோத்பத்தி வருடம் வைகாசி மாதம் 18-ஆம் தேதி வெள்ளிக் கிழமை பூச நட்சத்திரத்தில் கும்ப லக்கினத்தில்'' (17-5-175) என முற்குறிப்பிலும், "பிரசோத்பத்தி வருடம் ஆனி மாதம் 31ஆம் தேதி அமர பட்சத்தில் ஞாயிற்றுக்கிழமை துதிகை நாளும் அவிட்ட நட்சத்திரமும் சுப்பிர நாம யோகமும் (30-6-1751)'' எனப் பிற்குறிப்பிலும் இடம்பெற்றுள்ளமை இதனை உணர்த்தும்.

மேலும் முற்குறிப்பு, பிற்குறிப்பு ஆகியவைஇடம் பெறும் சுவடிகளில் இவ்விரண்டில் ஒன்று சரியாகக் குறிப்பினைத் தருமேயானாலும் காலத்தை உறுதி செய்யலாம். காட்டாக, ''அட்சய வருஷம் கார்த்திகை மாதம்'' என முற்குறிப்பிலும், ''பிரபவ வருஷம் ஆனி மாதம் வெள்ளிக்கிழமை நாள் பூச நட்சத்திரம் (3-6-1687)'' எனப் பிற்குறிப்பிலும் இடப்பெற்றுள்ளமையால் பின்னதைக் கொண்டு முன்னதன் காலத்தைக் கணிக்க முடிகிறது. அதாவது, பிரபவ வருடத்தின் முந்தைய அட்சய வருடமான 1686இல் கார்த்திகை மாதத்தில் இச்சுவடி எழுதத் தொடங்கியதாகக் கணக்கிடலாம்.

சுவடிகளின் காலத்தை உறுதி செய்வதற்கு நூலாசிரியர் பெயர் நூலின் பெயர், படியெடுத்தவர் பெயர், படியெடுப்பித்தவர் பெயர் சில நேரங்களில் துணை புரிந்தாலும் பெரும்பாலான காலக்குறிப்புக்கு ஆண்டுகள், மாதம், நாள், கிழமை, நட்சத்திரம் போன்ற இவ்வைந்து காலக்குறிப்புகள் மிகமிகத் தேவை.

ஆண்டுகள்

கலியுக சகாப்தம், சாலிவாகன சகாப்தம் (சக வருடம்), கொல்லம், தமிழ் போன்ற இந்நான்கு ஆண்டுகளோ, இந்நான்கில் ஒன்றோ இரண்டோ மூன்றோ குறைந்தும் சுவடிகளில் குறிப்பிடப் பெற்றிருக்கும். பெரும்பான்மையான சுவடிகளில் கொல்லமாண்டும் தமிழாண்டும் கொடுக்கப்பெற்றுள்ளன. சில சுவடிகளில் கலியுக சகாப்தமும் சாலிவாகன சகாப்தமும் கொல்லமாண்டும் தமிழாண்டும் கொடுக்கப்பெற்றுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பிறக்கும் நாள்கள் வெவ்வேறு மாதங்களில் வெவ்வேறு நாள்களில் அமைந்திருக்கிறதைக் காணலாம். கலியுக சகாப்தமும் தமிழாண்டும் சித்திரை மாதம் முதல் தேதியும், சாலிவாகன சகாப்தம் ஏப்ரல் மாதம் முதல் தேதியும், கொல்லமாண்டு ஆடி-ஆவணி மாதச் சந்திப்பிலும் பிறக்கின்றன.

கலியுக சகாப்தமே மிகப்பெரிய எண்கொண்ட, தொடராண்டாகக் கருதப்படுகிறது அதற்கடுத்து சாலிவாகன சகாப்தமும் அதற்கு மடுத்து கொல்லமாண்டும் கணக்கிடப்படுகின்றன. ஆங்கில ஆண்டைக் கணக்கில் கொண்டு பார்க்கும் போது,

திருவள்ளுவர் ஆண்டு	கி.மு. 31	பசலி ஆண்டு	கி.பி. 590
விக்ரம ஆண்டு	கி.மு. 57	சுதர்சன் ஆண்டு	கி.பி. 599
சாலிவாகனம் (சக வருடம்)	கி.பி. 78	ஹர்ஷ	கி.பி. 606
கேதி	கி.பி 248	கொல்லம்	கி.பி. 824
குப்த.,வல்லம்	கி.பி. 319	நேவார்	கி.பி. 879
கங்கஅப்	கி.பி. 496	லக்ஷ்மணசேன	கி.பி. 1179
உறிஜரி	கி.பி. 580	கலியுகசகாப்தம்	கி.மு. 3101

ஆகிய பதினான்குவகை ஆண்டுகளுடன் இன்றைய ஆங்கில ஆண்டைக் கூட்டி-கழித்து ஒவ்வொரு வகை ஆண்டின் காலத்தைக் கணிக்கலாம். (கி.மு. ஆண்டுகளைக் கூட்டியும், கி.பி. ஆண்டுகளைக் கழித்தும் ஆண்டைக் குறித்தல் வேண்டும்).

மேற்கூறிய இப்பதினான்கு வகை ஆண்டுகளுக்கும் தொடரெண்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழாண்டுக்கு மட்டும் பெயர்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. தமிழாண்டுகள் அறுபதும் சுழல்முறையில் குறிக்கப் பெற்று வருகின்றன. தமிழாண்டுகள்,

பிரபவ	சித்திரபானு	ஏவிளம்பி	பரிதாபி
விபவ	சுபானு	விளம்பி	பிரமாதீச
சுக்கில	தாரண	விகாரி	ஆனந்த
பிரமோதீச	பார்த்தீவ	சார்வரி	ராட்சச
பிரஜோற்பத்தி	விசய	பிலவ	நள
ஆங்கிரச	சர்வஜித்	சுபகிருது	பிங்கள
ஸ்ரீமுக	சர்வதாரி	சோபகிருது	காளயுத்தி
பவ	விரோதி	குரோதி	சித்தார்த்தி
யுவ	விகிருதி	விசுவாசு	ரெத்தி
தாது	கர	பராபவ	துன்மதி
ஈஸ்வர	நந்தன	பிலவங்க	துந்துபி
வெகுதான்ய	விஜய	கீலக	ருத்ரோத்காரி
பிரமாதி	ஜய	செம்ய	ரக்தாட்சி
விக்ரம	மன்மத	சாதாரண	குரோதன
விஷு	துன்முகி	விரோதிறுகிது	அக்ஷய-க்ஷய

ஆக அறுபதாகும். ஆண்டுகள் நிலையில் மேற்கூறிய பதினான்கு வகை ஆண்டெண்களில் ஒன்றோ சிலவோ பெற்றும் பெறாமலும்' தமிழாண்டுகள் பெற்றும் பெறாமலும் குறிப்புக்கள் குறிக்கப்பெற்றிருக்கும்.

மாதம்

மேற்காணும் குறிப்புக்களிலிருந்து சரியான ஆண்டைக் கணக்கிட முடிந்தாலும் எந்த மாதத்தில் எழுதியது/எழுதுவித்தது என்பதைக் கணக்கிட மாதக் குறிப்புக்கள் மிகமிகத் தேவையாகும். ஆண்டுகளில் ஒரு சில ஆண்டுகள் இருந்தும் இல்லாமலும் இருக்கலாம். ஆனால், மாதப்பெயர் இருந்தே யாகவேண்டும். ஓர் ஆண்டுக்குண்டான பன்னிரண்டு மாதங்களின் தமிழ்ப் பெயர்களோ இம்மாதங்களுக்கு நிகரான சமற்கிருதமொழிப் பெயர்களோ இரண்டு மொழியும் கலந்த பெயர்களோ குறிக்கப்பெற்றிருக்கும். தமிழ் மாதப் பெயர்களுக்கு நிகரான சமற்கிருதமாதப் பெயர்கள் கீழே வரிசை படுத்தப்பட்டுள்ளன,

சித்திரை - மேஷரவி	*ஐப்பசி — துலா*
வைகாசி - ரிஷபரவி	கார்த்திகை - விருச்சிகரவி
ஆனி — மிதுனரவி	மார்கழி - தனுர்ரவி
ஆடி - கடகரவி	தை - மகரரவி
ஆவணி - சிம்மரவி	மாசி - கும்பரவி
புரட்டாசி- கன்யாரவி	பங்குனி— மீனரவி

தேதி

காலக்குறிப்பில் தேதியும் ஒன்று. இத்தேதியும் காலம் கணிப்பதற்குத் தேவையாகின்றது. ஆனால், மாதத்திற்குக் கொடுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் தேதிக்குத் தேவையில்லை எனலாம் மாதமும் கிழமையும் நட்சத்திரமும் ஆண்டுகளும் இருந்தாலே தேதியைக் கணிக்க முடியும். கிழமையும் நட்சத்திரமும் இல்லாத போழ்தே தேதி மிகமிகத் தேவையாகிறது. காட்டாக, ''ஏசுமரியே சூசேக்கு 1850 ஆம் வருஷம் கார்த்திகை மாசம் 20-ஆம் தேதி (3-12-1850)'' (சத்தியாருடம், சு, எண், 1889:த) இதில் ஆங்கில ஆண்டும் மாதமும் தேதியும் மட்டுமே குறிப்பிட்டாலும் இதையே அடிப்படையாகக் கொண்டு கிழமையும் நட்சத்திரமும் கண்டுபிடிக்கலாம். இச்சுவடி செவ்வாய் கிழமையும் அனுச நட்சத்திரமும் கொண்டு எழுதப்பெற்றதாகும்.

ஆண்டுகளும் மாதமும் கிழமையும் தேதியும் கொண்டு நட்சத்திரம் இல்லாமலும், ஆண்டுகளும் மாதமும் தேதியும் நட்சத்திரமும் கொண்டு கிழமை இல்லாமலும் காலத்தைக் கணிக்கலாம். காட்டாக ''1041-ஆம் (கொல்லம்) வருஷம் குரோதன வருஷம் மார்கழி மாதம் 3-ஆம் தேதி விசாக நட்சத்திரம் (சனிக்கிழமை, 16,12, 1685)'' எனக் கிழமை இல்லாமையாலும் (சூடாமணி நிகண்டு கி.எண் 111:த); ''கீலக வருஷம் தை மாதம் 25-ஆம் தேதி மங்களவாரம் (செவ்வாய் கிழமை) (பரணி நட்சத்திரம், 3,2,1789)'' என நட்சத்திரமும் இல்லாமையாலும் (கோயிற்புராணம், சு,எண், 125;த) காலத்தைக் கணிக்க முடியும்,

கிழமை

தேதியைப் போன்றே கிழமையும் காலக்குறிப்பில் தேவையாகிறது காலக்குறிப்பில் தேதிக்குள்ளமுக்கியத்தும் கிழமைக்கும் உண்டு. தேதியும் கிழமையும் அவசியம் என்றாலும் இவற்றில் ஏதாவதொன்று இருந்தாலே காலக்கணிப்பிற்கு போதுமானதாகும், எடுத்துக்காட்டுகள் 'தேதி'க்குக் கொடுக்கப்பட்டதையே கொள்ளலாம், சுவடிகளில் கிழமைப்பெயர்கள்'

ஞாயிறு	- ஆதிவாரம்;	வியாழன்	- குருவாரம்
திங்கள்	- சோமவாரம்;	வெள்ளி	- சுக்கிரவாரம்
செவ்வாய்	- மங்கள வாரம்	சனி	- சனி, மந்தி வாரம்
புதன்	- புத, புந்தி, ஸ்திர வாரம்.		

எனக் கொடுக்கப்பெற்றிருக்கும்.

நட்சத்திரம்

தேதி மற்றும் கிழமை போல நட்சத்திரமும் காலக்குறிப்பிற்குத் தேவையாகிறது எனலாம், தேதி, கிழமைக்குள்ள முக்கியத்துவம் நட்சத்திரத்திற்கு இல்லை. நட்சத்திரக் குறிப்பு இல்லாமலேயே காலத்தைக் கணிக்க முடியும். காலம் கணிப்பதற்கு மாதம் மற்றும் ஆண்டுகள் முதல் தரவாகவும்; தேதியும் கிழமையும் இரண்டாந் தரவாகவும்; நட்சத்திரம் மூன்றாந் தரவாகவும் கொள்ள வேண்டும். முதலிரண்டு தரவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. காலக் கணிப்பிற்கு நட்சத்திரம் தேவையற்றது என்றாலும், பொழுது கணிப்பிற்கு பெரிதும் தேவைப்படுகிறது.

சாதகக் கணக்கின்படி, சூரிய உதயத்திலிருந்து அடுத்த 60 நாழிகை வரை ஒரு நாளாகக் கணக்கிடப்படுகிறது, $2\frac{1}{2}$ நாழிகை கொண்டது ஒரு மணி நேரமாகும். நட்சத்திரங்கள் 27ம் வெவ்வேறு நாழிகைகளைக் கொண்டிருக்கும். அவை,

1. அசுவனி — 65 நாழிகை
2. பரணி — 56 நாழிகை
3. கார்த்திகை — 56 நாழிகை
4. ரோகிணி — 56 நாழிகை
5. மிருகசீரிஷம் — 56 நாழிகை
6. திருவாதிரை — 56 நாழிகை
7. புனர்பூசம் — 62 நாழிகை
8. பூசம் — 52 நாழிகை
9. ஆயில்யம் — 56 நாழிகை
10. மகம் — 54 நாழிகை
11. பூரம் — 53 நாழிகை
12. உத்திரம் — 56 நாழிகை
13. அஸ்தம் — 57 நாழிகை
14. சித்திரை — 60 நாழிகை
15. சுவாதி — 65 நாழிகை
16. விசாகம் — 61 நாழிகை
17. அனுசம் — 60 நாழிகை
18. கேட்டை — 62 நாழிகை
19. மூலம் — $63\frac{1}{2}$ நாழிகை
20. பூராடம் — 62 நாழிகை
21. உத்திராடம் — 55 நாழிகை
22. திருவோணம் — $65\frac{1}{2}$ நாழிகை
23. அவிட்டம் — $66\frac{1}{2}$ நாழிகை
24. சதயம் — $53\frac{3}{4}$ நாழிகை
25. பூரட்டாதி — $66\frac{1}{2}$ நாழிகை
26. உத்திரட்டாதி — $63\frac{1}{2}$ நாழிகை
27. ரேவதி — 64 நாழிகை

இவ்விருபத்தேழு நட்சத்திரங்களின் மொத்த நாழிகை $1592\frac{3}{4}$ ஆகும், ஒரு நாளுக்கு 60 நாழிகைக் கணக்கின்படி 27 நட்சத்திரங்கள் நாழிகைகளைக் கணக்கிட்டுப் பார்ப்போமாயின் $1592\frac{3}{4}$/ 60-26 நாள் $32\frac{3}{4}$ நாழிகை யாகிறது. இருபத்தேழு நட்சத்திரங்களின் நாழிகைகளின் கூடுதல் இருபத்தேழு நாளை நிறைவு செய்யவில்லை. மேலும் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நாழிகைகள் வேறுபடுவதால் சில நேரங்களில் ஒரே நாளில் மூன்று நட்சத்திரங்கள் வருவதும்; பெரும்பாலும் இரண்டு நட்சத்திரங்கள் வருவதும்; சிறுபான்மை ஒரு நட்சத்திரம் வருவதும் இயற்கையே காட்டாக, ''குரோதி வருஷம் தை மாதம் 29–ஆம் தேதி ஆதி (ஞாயிறு) வாரம் ரேவதி நட்சத்திர கும்ப லக்கினம் திருதிபை திதியும் கூடின சுபதினத்திலே... (9-2-1845)'' என்னும் குறிப்பில் குறிப்பிடப்பெற்றிருக்கும் காலத்தில் ரேவதி நட்சத்திரம் சிறிது நாழிகையே அன்றைய தினத்தில் இடம் பெற்று இருந்தமையால், இச்சுவடி ரேவதி நட்சத்திரத்திற்குட்பட்ட பொழுதில் எழுதி முடிக்கப்பெற்றமையை உணரலாம். இதுபோல் பலசுவடிகளில் காணலாம்.

எழுதியவர் பெயர்வைத்துக்காலத்தைக் கணித்தல்

காலக்குறிப்புக்களான ஆண்டுகள், மாதம், தேதி, கிழமை, நட்சத்திரம் போன்றன இல்லாத போழ்து குறிப்பாகக் காலத்தைக் கணிக்கச் சுவடி எழுதியவர் பெயர், சுவடி எழுதுவித்தவர் பெயர் கொண்டும் செய்யலாம். சுவடி எழுதியவர் / எழுதுவித்தவர்களின் காலத்தை அறிந்தோமானால் அவரால் எழுதிய / எழுதுவித்த சுவடியின் காலத்தை ஓரளவிற்குக் கணிக்கலாம். சுவடி எழுதியவர் / எழுதுவித்தவர் ஒன்றுக்கும் மேற்பட்ட சுவடிகளை எழுதி / எழுதுவித்து இருப்பார்களே யானால் அவர்கள் ஏதாவதொரு சுவடியில் தம்மையும் காலத்தையும் குறிப்பிட்டிருப்பார்களே யானால் அதனைக் கொண்டு அவர் வாழ்ந்து முடித்த போழ்தில் எழுதிய / எழுதுவித்த சுவடிகளின் காலத்தைக் கணிக்கலாம். மேலும் சுவடிகள் கிடைக்கப்பெற்ற இடத்தைக் கொண்டும் அன்னாரின் கையெழுத்தைக் கொண்டு மேற்கூறிய முறையில் காலத்தைக் கணிக்கலாம். காட்டாக,

''துந்துபி வருஷம் மார்கழி மாதம் 16ஆம் தேதி திங்கட்கிழமை பரணி நட்சத்திரம் தசமி ஏகாதசியுங் கூடின சுபதினத்தில் எழுதிமுடிந்தது, எம்பெருமான் சதகம் முற்றும். கோயமுத்தூர் ஜில்லா தாராபுரந் தாலுகா தூரம்பாடிக்கிராமம் நத்தப்பாளையம் பெரியணப்புலவர் மகன் சாமிப்புலவர் எம்பெருமான் சதகம் எழுதி முடிந்தது (29-12-1862)'' (எம்பெருமான் சதகம், சு.எண். 1246:த:) என்னும் காலக்குறிப்பைக் கொண்டுப் பார்க்கும் போது சாமிப்புலவர் என்பவர் 1862 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் வாழ்ந்திருந்தார் என்று கணிக்கமுடிகிறது. அதாவது இவர் 19ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தார் எனலாம். எனவே, இவரால் எழுதப்பெற்ற பிற சுவடிகளும் அக்காலத்தனவாகக் கொள்ளலாம்.

எம்பெருமான் சதகம் கிடைத்த அதே பகுதியில் கிடைத்த இன்னொரு சுவடியான 'மன்றாடியார் வம்சாவளி' (1250:த) என்னும் சுவடியும் சாமிப்புலவரால் எழுதப்பெற்றது எனக்கருத இடமளிக்கிறது. சுவடியெழுதியவரின் காலத்தையும் கையெழுத்தையும் கருத்தில் கொண்டும் காலத்தை ஓரளவிற்குக் கணிக்கலாம். காட்டாக, ''தமிழ் பிரபவ வருஷம் ஆனி மாதம் 29ஆம் தேதியில் செப்பேட்டினுள்ள படிக்கு நகல் எழுதினது. சாமிப்புலவனார் எழுதினது'' என்ற குறிப்பிலிருந்து இச்சுவடி 11-7-1867 ஆம் காலத்தில் எழுதப்பெற்றதெனத் துணிய முடிகிறது.

**அமாவாசை சதுர்த்தி கொண்டு
காலத்தைக் கணித்தல்**

காலக்குறிப்புக்களான ஆண்டுகள், மாதம், தேதி, கிழமை, நட்சத்திரம் மற்றும் எழுதிய/எழுதுவித்தவரின் விவரம் இல்லாத போழ்து சில சிறப்பு நாள்களின் குறிப்பாலும் காலத்தைக் கணிக்க மூடியும். ஏகாதசி, சிவன்ராத்திரி, விநாயகர் சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி போன்ற சிறப்பு நாள்களையும் சுவடிகளின் காலக் குறிப்பில் குறிக்கப்பெற்றிருக்கின்றன. காட்டாக, ''விரோதிகிருது வருஷம் ஆடி மாதம் அமாவாசை திங்கள் வாரம் நந்தீசுவரர் நிகண்டு மூந்நூறு பாவாடை செட்டி எழுதினது (28-7-1851)'' (நந்தீசர் நிகண்டு, சு.எண், 906:த).

''வெகுதானிய வருஷம் ஆவணி மாதம் 26ஆம் தேதி சதுர்த்தி அன்றைக்கு கொடுமணலில் இருக்கும் சென்னிமலைப் புலவன் குமாரன் தங்கமுத்து விக்கிரமாதித்த ராசா கதை எழுதி முடிந்தது.'' (விக்கிரமாதித்தன் கதை, சு.எண், 1157:த).

மேற்கண்டவாறு கிடைக்கும் தரவுகளைக் கொண்டு சுவடிகளின் காலத்தைக் கணிக்க முடியும். இவை தவிர ஆங்கில ஆண்டு, மாதம், தேதி போன்ற குறிப்புகளும் சில சுவடிகளில் காணப்பெறுகின்றன, அவற்றைக் கொண்டும் காலத்தை எளிதில் கணிக்க முடியும். ஓர் ஆண்டின் காலம் கணிக்கப்பட்டு விட்டால் மற்றைய ஆண்டுகளின் (கலியுக சகாப்தம், சாலிவாகன சகாப்தம், கொல்லமாண்டு போன்ற இன்னோரன்ன ஆண்டுகள்) காலமும் கணக்கிட்டு விடலாம்.

திருக்கோவையே முதற்கோவை

—*முனைவர் கி. இராசா*

அகப்பொருளை முழுமையாகப் பேரின்ப விளக்கத்திற்குப் பயன்படுத்திய முதல்நூல் திருக்கோவையாகும். பாசத்தால் கட்டுண்ட உயிர்கட்குப் பதியின் பெருமையை உணர்த்துதல் இந்நூலின் பாடு பொருளாக அமைந்துள்ளது[1]. மாணிக்க வாசகர், இப்பக்திப் பொருளுக்கு அகப் பொருளால் ஆக்கம் தந்துள்ளார். சான்றாக, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனும் அகத்துறைக்கு, 'சிவசக்தியாகிய அருளே சிவத்தை உயிர் அறியாவண்ணம் செய்யும் மாயேயம் என்னும் மலமுமாகின்ற தன்மையைத் தெரிவித்தல்'[2] என்ற விளக்கத்தைத் திருக்கோவை தருகின்றது. 'செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்' எனும் துறைக்கு 'திரோதன சக்தி உயிர் சிவத்தோடு கலந்த தன்மையைப் பராசக்திக் குணர்த்தல்'[3] என்ற விளக்கத்தை இந்நூல் தருகிறது. இவ்வாறு தலைவனை உயிராகவும், தலைவியைச் சிவமாகவும், தோழியை அருளாகவும், செவிலித்தாயைத் திரோதன சக்தியாகவும், நற்றாயைப் பராசக்தியாகவும், திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் படைத்துக் காட்டியுள்ளார்.

கோவை இலக்கிய வரலாற்றில் திருக்கோவையாருக்குத் தலைமையிடம் உண்டு. கோவை இலக்கணங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமுதல் முறையான நூல் திருக்கோவை எனலாம். மானிடருக்குப் பாடப்படும் அகப் பொருளான கோவை, முதன் முதலாக இறைவனுக்குப் பாடப்பட்டது. இவ்வாறு திருக்கோவையார் தலைமை பெறுவதற்குப் பின்வரும் சூழல்கள் காரணமாக இருந்திருத்தல் கூடும்:

அ) மாணிக்கவாசகர் காலத்தில் பாண்டியன் வரகுணனுக்கும் பல்லவன் தந்திவர்மனுக்கும் கி.பி. 806 முதல் 817 வரை 12 ஆண்டுகள் பல போர்கள் நடைபெற்றன. அனைத்திலும் பாண்டியனே வென்றான். இதே காலத்தில் தந்தி வர்மன் வடக்கே இராட்டிரகூடர் படையெடுப்பாலும் தவித்தான்[4]. இதனால்

மாணிக்க வாசகர் காலத்தில் பாண்டியநாடு புகழோங்க, பல்லவ நாடு சீர்குன்றியிருந்தது. புகழுச்சியில் இருந்த பாண்டிய நாடு, புதிய இலக்கிய வகைகள் தோன்ற நிலைக்களமாயிற்று.

ஆ) மாணிக்கவாசகருக்கு முன்பிருந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் அகப்பொருள் தோய்ந்த இறைப்பாசுரங்களைப் பாடிச் சமய உணர்வினைப் பரப்பினர். இத்தகு முன்னோர் நெறியில் மனங்கொண்ட மாணிக்கவாசகர், சங்க இலக்கிய அகப்பொருள் மரபின் வாயிலாகச் சமயத்தைப் பரப்புவதற்குக் கோவை எனும் புதிய இலக்கிய வகையை யாத்தார்.

இ) கோவை பாடுவதற்கு முன்பே அகப்பொருள் மரபுகளை மாணிக்க வாசகர் திருவாசகத்தின்கண் பெய்து பாடினார்.[5] இவ்வாறு அகப்பொருள் மரபில் தோய்ந்திருந்த மாணிக்க வாசகர், அவற்றை ஒருங்கிணைத்துக் கோவையாகப் பாடவேண்டும் என்று உளங் கொண்டாரராகலாம்.

ஈ) மாணிக்கவாசகர்தம் பக்தியின் புறவுணர்வு திருவெம்பாவையாக வடிவம் பெற்றது; இருப்பினும், அவர்தம் அகவுணர்வு இதனால் நிறைவுறவில்லை எனலாம். குருந்தமரத்தின் கீழ் குருவாக வந்தமர்ந்தும், பல்வேறு திருவிளையாடல்கள் புரிந்தும் இறைவன் ஆட்டுவித்த மாணிக்கவாசகர்தம் அகவுணர்வு, திருக்கோவையார் பாடியபின்னர் நிலைபெற்றது.

2) திருக்கோவையார்க்கு முன்னர்த் தோன்றிய பாண்டிக்கோவை, தொகை நூலாகவும் கருதப்படுகிறது. பாண்டிக்கோவை தொகை நூலாகத் தோற்றமளித்தமையால், முழுமையான, முறையான முதல்கோவை நூலாகத் திருக்கோவை யெனும் புதிய நூலினைப் படைக்க மாணிக்கவாசகர் மனங்கருதியிருத்தல் கூடும்.

திருக்கோவையாரும் களவியற்காரிகையும்

யாப்பருங் கலத்துக்கு விளக்கமாக யாப்பருங்கலக் காரிகை அமைந்தது போன்று இறையனார் களவியலுக்கு விளக்கமாகக் களவியற்காரிகை அமைந்துள்ளது. இக்களவியற் காரிகையில் பாண்டிக் கோவைப் பாடல்களும், திருக்கோவையார் பாடல்களும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் திருக்கோவையார் பாடல்கள் மட்டுமே தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளது. பாண்டிக்கோவைப் பாடல்களில் இத்தகுத் தொடர்ச்சி இல்லை[6]. சான்றாக, இடந்தலைப்பாடு எனும் பாங்கனாலாய கூட்டத்திற்குரிய பதினெண்துறைகளுக்கும் மேற்கோட் செய்யுட்களைக் காட்டு மிடத்துத் திருக்கோவையாரில் 20-24, 28-30

32-3436, 38, 41, 43, 45, 46, 48 ஆகிய பாடல்கள் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளன. பாண்டிக்கோவையில் 24, 27, 30, 34, 33, 35, 36, 38, 39. 40, 42, 43, 44, 39, 51, 58, 49, 53, 54, 20 ஆகிய பாடல்கள் முன்னும் பின்னும் மாறிக் காட்டப்பட்டுள்ளன. இச்சான்றும் முழுமையான, முறையான, முதல்கோவை நூலாகத் திருக்கோவையார் திகழ்வதைச் சுட்டவல்லது.

திருக்கோவையும் புறப்பொருள் வெண்பாமாலையும்

திருக்கோவைக்கும், பு.வெ. மாலைக்கும் அமைப்பு முறையில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. திருக்கோவை, நானூறு அகத்துறைகளால் (கிளவிகளால்) ஆனது. இவை இருபத்தைந்து தொகுதிகளாக அமைந்துந்துள்ளன. அகத்துறை ஒவ்வொன்றும் கொளுவினால் விளக்கப்பட்டுள்ளது; மிகைக் கொளுக்களும் மிகைச் சான்றுப் பாடல்களும் பெற்ற துறைகள் திருக்கோவையில் உள்ளன. திருக்கோவையின் இவ்வமைப்பு கோவை இலக்கிய வகைக்கு இலக்கணம் அமைக்கத் துணையாக இருந்தது. இவ்வகையில் கோவை இலக்கியமாகவும், இலக்கணமாகவும் திருக்கோவை திகழ்கிறது.

புறத்திணை இலக்கணம் நுவலும் பு.வெ. மாலையில் முந்நூற்று முப்பத்தியிரண்டு புறத்துறைகள் அமைந்துள்ளன. இவை பதினேழு நூற்பாக்களில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. துறைகள், கொளுச் செய்யுளாலும், கொளுச்செய்யுட்கள், சான்றுப் பாடல்களாலும் விளக்கம் பெற்றுள்ளன. திருக்கோவை போன்று மிகைக் கொளுக்களும், மிகைச்சான்றுப் பாடல்களும் பெற்ற துறைகள் பு.வெ. மாலையில் உள்ளன. பு.வெ.மாலையின் காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. திருக்கோவை ஆசிரியரான மாணிக்கவாசகரும் இக்காலத்தவரே ஆவர். சமகாலத்தில் தோன்றிய திருக்கோவையும், பு.வெ. மாலையும் முறையே அகப்பொருள், புறப்பொருள் அமைப்பு முறையில் ஒன்றையொன்று சார்ந்து வளர்ந்திருத்தல் வேண்டும் என்று கருத இடமுண்டு.

கோவை இலக்கணத்திற்குத் தோற்றுவாய்

'களவு, கற்பு' என்ற ஐந்திணைப் பொருத்தத்துடனும், காட்சித் தொடர்புடனும், திணை, கைகோள், கூற்று, பாட்டிற்குரிய பன்னிரு உறுப்புக்களும் அமைய, நானூறு கலித்துறைச் செய்யுட்களால் பாடப்பெறுவது கோவை இலக்கியம்'[7] எனப்பிற்காலப் பாட்

டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. இவ்வாறு இலக்கணம் வகுப்பதற்குத் திருக்கோவையார் தோற்றுவாயாகத் திகழ்ந்துள்ளது.

திருக்கோவையாரில் துறைக்கு ஒருபாடல் வீதம் நானூறு பாடல்கள் அமைந்துள்ளன. களவுப் பகுதியில் இருநூற்று அறுபத்தைந்து துறைகளும் கற்புப் பகுதியில் நூற்று முப்பத்தைந்து துறைகளும் இயன்றுள்ளன. இதனைப் பின்வருமாறு காட்டலாம்:

களவு :	குறிஞ்சி	......	....	265
கற்பு :	முல்லை +	பாலை +	மருதம்	135
	பிரிவு	பிரிவு	பிரிவு	
	(வினை)	(பொருள்)	(பரத்தை)	400

பிற்காலக் கோவை நூல்களில் களவுத் துறைகளின் ஆட்சி மேலோங்கியமைக்குத் திருக்கோவையார் சான்றாக அமைந்துள்ளது. திருக்கோவையாரில் எழுபத்தைந்து விழுக்காடு (265/400) துறைகள், களவுப் பொருண்மையில் அமைந்துள்ளன. மொத்தக் கிளவித்தொகைகள் இருபத்தைந்தில் பதினெண் கிளவித்தொகைகள் களவிற்குரிய குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளன.[8] பிற, [9]முல்லையில் ஒன்றும், பாலையில் ஐந்தும்,[10] மருதத்தில் ஒன்றுமாக[11] அமைந்துள்ளன.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்'[12] என்பது இலக்கிய வரலாற்றில் காணப்படும் பொது நெறியாகும். முன்னர் நிலவிய பல இலக்கிய இலக்கணங்களைக் கண்டுணர்ந்து தொல்காப்பிய இலக்கணம் செய்யப்பட்டது. தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணத்தை மனங்கொண்டு இறையனார் களவியல் உருவாயிற்று. இறையனார் களவியலுக்குக் கி பி. எட்டாம் நூற்றாண்டில் உரை வளர்ந்தபோது, பாண்டிக்கோவை அதற்கு இலக்கியமாக எடுத்துக் காட்டப் பெற்றது. இதற்குப் பின்னர்த் தோன்றிய அகப்பொருள் இலக்கண வளர்ச்சியை எடுத்துக்காட்டும் வண்ணம் கொளுக்களையும், கொளுவிளக்கச் செய்யுட்களையும் படைத்து கோவை இலக்கிய வகையின் முழுமுதல் இலக்கியமாகவும் இலக்கணமாகவும் திருக்கோவையார் ஒருங்கே உருவாயிற்று.

நூல் மதிப்புரை

சிலம்பின் வாழ்த்தியல்

(ஆசிரியர் : டாக்டர். இரா. இராசகோபாலன். ஆசிரியர் வெளியீடு: அண்ணாநகர், மதுரைச்சாலை, திருப்புத்தூர் (பசும்பொன்-623 211). முதற் பதிப்பு பக்கம் : 80 விலை ரூ. 11-00.)

டாக்டர் இரா. இராசகோபாலன் **சிலம்பின் வாழ்த்தியல்** என்னும் இந்நூலை உயர்ந்த ஆய்வுநோக்கில் படைத்துள்ளார். இதனுள் தோற்றுவாய், இறுவாய் தவிர்ந்த அரசவாழ்த்து, இறை வாழ்த்துக்கள், இயற்கை வாழ்த்தும் நகர வாழ்த்தும், தனிப்பட்ட வாழ்த்துக்கள் என்ற நான்கு அரிய தலைப்புகள் அடங்கியுள்ளன.

தோற்றுவாய்ப் பகுதியில் ஆசிரியர் தாம் இந்நூல் எழுத முற்பட்ட காரணத்தை நயம்பட எடுத்துரைத்துள்ளார். இறுவாய்ப் பகுதியில் ஆசிரியர் நூலுள் இடம்பெற்றுள்ள ஆய்வுகளை நிரல்படத் தொகுத்துள்ளார். இதனைப் படித்தால் நூலை முழுமையாகப் படித்த உணர்வு படிப்போர்க்கு இயல்பாகவே தோன்றும்.

இந்நூல் ஒரு புதிய படைப்பு. செய்திகள் பழையவை. அவற்றைத் தொகுத்து, வகுத்து, ஆய்வுநெறிப்படுத்தி வெளிப் படுத்தும் திறம் வியக்கத் தக்கது. பன்முறையும் படித்துச் சுவைத்த இலக்கிய அன்பர்களும் சிலம்பின் வாழ்த்தியலைப் படிக்கும்போது ஒரு புதிய உணர்வினையும் தெளிவினையும் புதுமையினையும் பெற்று மகிழலாம்.

சிலம்பில் பல்வேறு காதைகளுள் பொதிந்து மிளிரும் வாழ்த் தியற் கூறுகளை முறையாகவும் நிரல்படவும் கோவை செய்து ஒரு வாழ்த்தியல் மாலையாகத் தொகுத்துத் தமிழன்னைக்குச்சூட்டி மகிழும் ஆசிரியரின் திறனாய்வு வன்மை பாராட்டுக்குரியது.

எளிய தமிழ்நடை; செம்பாகமான போக்கு; படிப்போரைக் கவரும் படைப்பாற்றல், தெளிவு முதலியன இந்நூலின் மிகச்சிறந்த இயல்புகளாகும்.

ஆசிரியரின் ஆழ்ந்த புலமையும் ஆங்கில இலக்கியத்திறலும் இந்நூலுக்குப் பொலிவூட்டுவனவாகும்.

டாக்டர் நா. பாலுசாமி

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3.	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	25-00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி.சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக்குறிப்பு	10-00
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை, கலம்பக நூல்கள்**	12-00
12.	**உலா நூல்கள்**	10-00
13.	**பாமாலை நூல்கள்**	12-00

11. **கோவை, கலம்பக நூல்கள்** — 12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. கலசைக்கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12. **உலா நூல்கள்** — 10-00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13. **பாமாலை நூல்கள்** — 12-00

1. திருப்பணிமாலை
2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (,, ,,)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்**

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநிஷா பஞ்சகம்**

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 15-00 **செந்தமிழைக் கண்ணுறும்** தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1.

திருப்பதி பிரிண்டர்ஸ் ★ மதுரை-1.